விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 25
ஒலி 362 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 30 ஞாயிற்றுக்கிழமை (15.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டத்தில் அமைதியின்மை

### பொலிஸார் – பொதுமக்கள் முரண்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தையிட்டிப் பகுதியில் அமைந்துள்ள சட்ட விரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

பொலிஸார் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடு 19



## கிளிநொச்சி, முள்ளியவளையில் அன்ரன் பாலசிங்கத்தின் 18ஆம் ஆண்டு நினைவு தினம்

(முல்லைத்தீவு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல் முள்ளியவளை பிரதேசத்தில் நேற்று 19



## சபாநாயகரின் பதவி விலகல் பாராட்டத்தக்கது

### நாமல் எம்.பி

(கொழும்பு)

சபாநாயகர் அசோக சபுமல் ரண்வல பாராளுமன்றத்தில் முன்வைத்ததாகக் கூறப்படும் போலியான கல்வித் தகைமை தொடர்பில் சமூக எதிர்ப்பு காரணமாக சபாநாயகர் அசோக சபுமல்ரண்வல தனது பதவியை இராஜினா 19

## பதவி விலகிய மாவை தலைமையில்

# தமிழரசுக் கட்சியின் கூட்டம் நடத்த முடியாது

### போர்க்களமாக மாறிய தமிழரசின் மத்திய குழுக்கூட்டம்

(வவுனியா)

மாவை சேனாதிராசா தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகிவிட்டார். அவர் தலைமையில் கூட்டம் நடத்த முடியாது எனத் தெரிவித்ததால் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் குழப்பநிலை ஏற்பட்டிருந்தது.

(04ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்.போதனாவில் மயங்கி வீழ்ந்த நபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வந்த ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவமானது நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. 19

## முதலாவது அரசு முறை விஜயமாக ஜனாதிபதி அநுர குமார இன்று இந்தியா விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் தனது முதலாவது அரசுமுறை விஜயமாக இன்று புதுடெல்லிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து 19

## ஐ.நா உயர்ஸ்தானிகர் பிரதமர் ஹரிணியுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் அகதிகளுக்கான உதவி உயர்ஸ்தானிகரும், ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச்செயலாளருமான ருவேந்திரினி மெனிக்திவெல பிரதமர் கலாநிதி ஹரிணி 19



## எதிர்வரும் 17ஆம் திகதி புதிய சபாநாயகர் தெரிவு

(கொழும்பு)

புதிய சபாநாயகரை அடுத்த பாராளுமன்ற அமர்வின் முதல் நாளில் தெரிவு செய்ய வேண்டும் என பாராளுமன்ற பிரதி பொதுச் செயலாளர் சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார்.

அதன்படி எதிர்வரும் 17ஆம் திகதி புதிய சபாநாயகர் தெரிவு இடம்பெறவுள்ளது.

புதிதாகத் தெரிவு செய்யப்படவுள்ள சபாநாயகர் தொடர்பில் சர்ச்சை எழுந்தால் அன்றைய தினம் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

எதிர்வரும் 17ஆம் 19

## புத்தூரில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

புத்தூரில் மயங்கி வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் புத்தூர் நவக்கிரிப் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணன் தவசீலன் 19

## உலக செஸ் சம்பியன் பட்டத்தை தன்வசப்படுத்திய


### தமிழ்நாட்டு வீரர் குகேஷ்

(சென்னை)

சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சம்பியன் தொடரின் வெற்றியாளர் பட்டத்தை இந்திய கிராண்ட் மாஸ்டர் குகேஷ் தன்வசப்படுத்தியுள்ளார். 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1990 இல் பிறந்த பூரம் நட்சத்திரம், 7 இல் செவ்வாய், கிரகபாவம் - 33 உள்ள அரச உத்தியோக மணமகனுக்கு 5 வயது வித்தியாசத்தில் அரச தொழில் புரியும் மணமகள் தேவை. (2761)

**077 914 7318**
**076 668 8199**


# சம்பூரில் காற்றாலை மின்சாரத் திட்டம்

(திருகோணமலை)

இந்திய நிதி உதவியுடன் திருகோணமலை சம்பூரில் 120 மெகா வோட் திறன் கொண்ட காற்றாலை மின்சார நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந்திய மத்திய மின்சார ஆணையம் மற்றும் இலங்கை மின்சார சபைகளுக்கு இடையேயான கூட்டு முயற்சியாக இந்தத் திட்டம் இருக்கும்.

2024 டிசம்பர் 15 முதல் 17 வரை திட்டமிடப்பட்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் இந்தியா விற்கான அதிகார பூர்வ விஜயத்தை முடித்த பின்னர், இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என்று எரிசக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபால தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அதானியின் முதலீட்டில், வடக்கின் பூநகரி மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் காற்றாலை மின்சாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. (ம-7)


## மணமகள் தேவை
### [சூரியன் / செவ்வாய்]

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1987 ஆம் ஆண்டு பிறந்த தொழிலதிபராகப் பணி புரியும் மணமகனுக்கும் 1994, சதயம் நட்சத்திரம், Finland Citizen உள்ள மணமகனுக்கும் மணமகள் தேவை. (2758)

**077 990 6328**
**077 600 7775**

## Kithu Bus Booking

யாழ்ப்பாணம் > கொழும்பு
கொழும்பு > யாழ்ப்பாணம்

**இரவு, பகல்**
பெண்களுக்கான விசேட ஆசனங்கள் பெற முடியும். (633)


**077 893 5841**
**075 393 5841**





# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30 - 10 - 1946 | 14 - 12 - 2024 |



## சந்தியாப்பிள்ளை அன்ரன் செல்வராஜா
(நெல்லியடி மொடேர்ன் ஸ்ரோர்ஸ் – உரிமையாளர்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் உச்சிலம்மன் கோவில் கரணவாய் கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை அன்ரன் செல்வராஜா அவர்கள் நேற்று (14.12.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை – மரியமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான அமிர்தநாயகம் – அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் மாக்றேட் மெலனி அவர்களின் அன்புக் கணவரும் அலோயிஸ் பவன்ராஜ் அவர்களின் பாசமிகு தந்தையும் ஷெர்லி பிரதீபாவின் அன்பு மாமனாரும் அமிக்க தனிஷாவின் பாசமிகு பேரனும் அக்னேஸ் மங்களம், காலஞ்சென்றவர்களான பிலோமினா, அருட்சகோதரி ஜோசப்பின் மற்றும் மேரி எம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜோய், பேட்டி, டிலானி, ஜொயல், டனி, பால்ராஜ், டானியேல், சோபினி, ஜேம்ஸ், எசாந்தியா, ரூபின் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் நாளை 16.12.2024 திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு திருப்பலிக்காக கரவை பரலோக மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கத்திற்காக கரவை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 6307 760 (C-1802) தகவல்: குடும்பத்தினர்


## பதவி வெற்றிடங்கள்

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை மற்றும் அதன் யாழ்ப்பாண கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பொருத்தமானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| இல | பதவி | தகைமை | தெல்லிப்பளை கிளை | யாழ்ப்பாண கிளை |
|---|---|---|---|---|
| 1 | முகாமையாளர் - அபிவிருத்தி | ஏதாவது ஒரு துறைக்கான பட்டம் ஐந்து வருட அனுபவம் | 1 | |
| 2 | முதியோர் இயல்பு வாழ்வு இல்ல மேற்பார்வையாளர் | G.C.E (A/L) | 2 | |
| 3 | எழுதுனர் | G.C.E (A/L) வணிகத்துறை | 1 | 1 |
| 4 | பகுதி நேர வெளிக்கள அலுவலர் | G.C.E (A/L) சாரதி அனுமதிப் பத்திரம் | 1 | |
| 5 | தாதிய உதவியாளர்கள் | தாதிய டிப்ளோமா /தாதிய பயிற்சிச் சான்றிதழ் ஒரு வருட அனுபவம் | 2 | 4 |
| 6 | வரவேற்பாளர் | G.C.E (A/L) | 1 | 1 |
| 7 | முதியோர் பராமரிப்பாளர் | துறையின் மீதான அனுபவம் | 3 | |
| 8 | சுத்திகரிப்பாளர் | துறையின் மீதான அனுபவம் | 2 | 2 |
| 9 | காவலாளி (இரவு) | துறையின் மீதான அனுபவம் | | 1 |
| 10 | ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | With SLMC | 1 | |
| 11 | ஆய்வுகூட உதவியாளர் | துறையின் மீதான அனுபவம் மற்றும் சான்றிதழ் | 1 | |

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களின் சுயவிபரத்தினை எமது tellicoophospital@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரியூடாகவும். 076 7711 417 என்ற Whatsapp இலக்கத்தினூடாகவும் எதிர்வரும் 2025.01.01 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிக தகவல்களுக்கு : 077 238 0196, 076 771 1417

தலைவர்,
தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை,
தெல்லிப்பளை.

(C-1800)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விசேட திட்டங்களை அமுல்படுத்தி

# வடக்கு-கிழக்கை அபிவிருத்தி செய்யுங்கள்

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



(யாழ்ப்பாணம்)

**போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விசேட திட்டத்தை வகுத்து அபிவிருத்தி செய்யுங்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு துறை சார்ந்த திட்டங்கள் தொடர்பில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "போரால் பாதிக்கப்பட்ட மாகாணமாக வடக்கு கிழக்கு இருப்பதால் அதனை அபிவிருத்தி செய்வதற்கு விசேட நிதி ஒதுக்கீடு தேவை. எனவே அரசாங்க நிதியிலோ அல்லது வெளிநாடுகளின் நிதி உதவிகளைப் பெறுவதன் மூலமாகவோ விசேட திட்டங்களை அமைத்து அபிவிருத்திகளை செய்ய வேண்டும். ஏனைய மாகாணங்களைப் போன்று இங்கும் அவ்வாறு செய்வதால் முன்னேற முடியாது.

மேலும் கடந்த காலத்தில் யாழ் நகரத்தில் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் யாழ்.மாவட்ட செயலகம், யாழ்ப்பாண பிரதேச செயலகம், யாழ் மாநகர சபைகளின் எந்தவிதமான அபிப்பிராயங்களையும் கேட்காது திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது கடந்த கால அரசாங்கத்திற்கும் அதிலிருந்தவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காகவும் உருவாக்கப்பட்டது. அதற்கான சகல திட்டங்களும் கொழும்பில் தான் மேற்கொள்ளப்பட்டது.

இந்த திட்டத்தால் தான் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது. இவ்வாறான திட்டங்களை மேற்கொள்ளாது மக்களின் தேவைகளுக்கு ஏற்ப விசேட திட்டங்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு உருவாக்கி முன்னோக்கி செல்ல வேண்டும்.

கடற்றொழில் அமைச்சராக உள்ளமையால் அமைச்சரவையிலும் இந்த விடயத்தை பேசி அதற்கான திட்டத்தை உருவாக்கவேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)

# அடுத்த சபாநாயகராக கலப்பதி? அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

அடுத்த சபாநாயகர் பதவிக்கு நிஹால் கலப்பதியை கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

சபாநாயகர் பதவிக்கு அசோக ரன்வல நியமிக்கப்பட்டு ஒரு மாதம் கூட செல்லாத நிலையில் அவர் நேற்று முன்தினம் பதவி விலகியுள்ளார்.

அவரின் கல்வித் தகைமை தொடர்பில் எழுந்த சர்ச்சையால் அவர் தாமாகவே முன்வந்து பதவி விலகியுள்ளார்.

சபாநாயகர் பதவிக்கு கலாநிதி பட்டம் அவசியமில்லை, பாராளுமன்ற உறுப்பினர் பதவி இருந்தாலே போதும்.

இந்நிலையில் அவர் கல்வித் தகைமை அற்றவர் என்பது இன்னமும் உறுதியாகவில்லை எனினும் உரிய சான்றிதழ்களை முன்வைக்க முடியாத காரணத்தால் அவர் பதவி துறந்துள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையில் அடுத்த சபாநாயகர் பதவிக்கு நிஹால் கலப்பதியை கொண்டு வருவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது. (நி-8)

# 2 மில்லியனை எட்டும்

## சுற்றுலாப் பயணிகளின் வருகை

(கொழும்பு)

இந்த ஆண்டில் இதுவரை சுமார் 1.9 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

டிசம்பர் மாதத்தில் மாத்திரம் 90,000 இற்கும் அதிகமானோர் வருகை தந்துள்ளதாக அதன் தலைவர் புத்திக ஹேவாவசம் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 2.2 மில்லியன் என்ற இலக்கை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த இலக்கை எட்டிய பின்னர், 2018 ஆம் ஆண்டிற்கு பிறகு இரண்டு மில்லியன் இலக்கை எட்டுவது இதுவே முதல் முறையாகும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-8)

# சிங்கள மக்களுக்காக யாரும் குரல் எழுப்புவதில்லை

# தேரர் ஆதங்கம்



(கொழும்பு)

நாட்டில் உள்ள சிங்கள மக்களை காப்பாற்றுவதற்கு பௌத்த பிக்குகள் அணிதிரள வேண்டும் என ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், நாம் சிங்கள மக்கள் பற்றிப் பேசினால் இனவாதம் என்கிறார்கள், அடிப்படைவாதிகள் என்கிறார்கள்.

பாராளுமன்றத்தில் தமிழர்களுக்காக தமிழ் எம்.பிக்கள் குரல் கொடுக்கிறார்கள். முஸ்லிம்களுக்காக முஸ்லீம் எம்.பிக்கள் பேசுகிறார்கள். ஆனால் சிங்களவர்களுக்காக யாரும் குரல் எழுப்புவதில்லை.

இந்த நாட்டில் உள்ள சிங்களவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காக பௌத்த பிக்குமார் அணிதிரள வேண்டியது அவசியமாகும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-8)

தமிழர் தாயகத்தின் முதன்மை நாளிதழ்
அதிக வாசகர்கள்
அதிக விற்பனை
உங்கள் வலம்புரி
25 ஆண்டு நிறைவில்
வெள்ளி விழாக் காண்கிறது
இடம்: துர்க்கா மணி மண்டபம்
காலம்: 20.12.2024 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 3 மணி
வெள்ளிவிழாவில் கலந்து கொள்ள உங்கள் அனைவரையும் இரு கரம் கூப்பி அழைக்கின்றோம்.
வலம்புரிக் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக் ....

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் காலை 10 மணிக்கு நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இந் நிலையில் நேற்றைய கூட்டத்தில் வழமையை விட அதிகமான மத்தியகுழு உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது கூட்டத்தை ஆரம்பிப் பதற்குச் செயலாளர் முற்பட்டார். இதன் போது குறுக்கிட்ட முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் சி.சிவமோகன், கட்சி யின் தலைவர் மாவை.சேனாதிராசா வருகை தராமல் கூட்டத்தை நடத்த வேண்டாம் எனத் தெரிவித்திருந்தார்.

இதனால் கூட்டத்தில் குழப்பநிலை ஏற்பட்டது. அவர் பதவி விலகிவிட்டார் அவரின் தலைமையில் கூட்டம் நடத்த முடியாது. எனவே உடனடியாகக் கூட்டத்தை ஆரம்பிக்குமாறு இரா.சாணக்கியன் கடும் தொனியில் தெரிவித்தார்.

மாவைக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தித் தருவீர்களா எனக் கேட்குமாறு சிவமோகன் தெரிவித்த போது இது கோல் சென்ரர் அல்ல. கட்சி. உங்கள் வைத்திய சாலை அல்ல இது. என்று சாணக்கியன் பதில் அளித்தார். அவர் மாத்திரம் அல்லா மல் ஏனைய சில உறுப்பினர்களும் கூட்டத்தை உடனே ஆரம்பிக்குமாறு கூறினர். இதனால் சிவமோகனுக்கும் அவர்களுக்கும் இடையில் கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

கூட்டத்தை உபதலைவர் தலைமை யில் உடனடியாக நடத்துங்கள் அல்லா விடில் குழப்புபவர்களை வெளியேற்ற வேண்டிவரும் என பீற்றர் இளஞ்செழிய னும் தெரிவித்திருந்தார்.

தனது நிலைப்பாட்டில் சிவமோகனும் விடாப்பிடியாக நின்றமையினால் நீண்ட நேரமாகக் கூட்டம் ஆரம்பிக்கப்படாமல் போர்க்களமாக மாறியது. சிவமோகனுக்கு அருகில் எழுந்துசென்ற சுமந்திரன் அவரை சமாளிக்கும் பணியில் ஈடுபட்ட போதும் அது பலனளிக்கவில்லை.

இந்நிலையில் 10.45மணியளவில் கூட்டம் இடம்பெறும் மண்டபத்திற்கு மாவை.சேனாதிராசா வருகை தந்திருந் தார். இதன்போது உங்கள் தலைமையில் கூட்டத்தை நடத்த ஏலாது மாவை ஐயா. எனவே அந்தக் கதிரையில் இருக்க வேண் டாம் இந்துப்பக்கம் இருங்கள் என்று பாராளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அவருக்குத் தெரிவித்தார்.

அதனை பொருட்படுத்தாத மாவை. சேனாதிராசா முன்பகுதியிலுள்ள இருக் கையில் சென்று அமர்ந்தார்.

அதன்பின்னர் கூட்டத்தில் அமைதி ஏற் பட்டதுடன் முடிவுகள் எதுவும் எடுக்கப்படா மல் கூட்டம் நிறைவடைந்தது.(ம-7,250)


## விற்பனைக்கு

1. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் C.T.B தரிப்பிடத்திற்கு முன்பாக 45 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட 3 கடைத் தொகுதியும்
2. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 32 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட கடைகளும்
3. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 16 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட தனிக் கடையானது நவீன சந்தை முன்பாக
4. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 6 பரப்புக் காணியும்
5. யாழ். பலாலி வீதியில் S.V.M எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக 5 பரப்புக் காணியும்
6. யாழ். பலாலி வீதியில் வசந்தம் பார்மசிக்கு முன்பாக 6 பரப்புக் காணியும்
7. யாழ். பலாலி வீதியில் தபாற் பெட்டிச் சந்திக்கு அண்மையில் மக்கள் வங்கிக்கு முன்பாக 4 பரப்பில் அமைந்த காணியும் வீடும்
8. யாழ். K.K.S வீதியில் Signal சந்திக்கு அண்மையில் 20 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 3 மாடிக் கடைகளும்
9. யாழ். மின்சார நிலைய வீதியில் C.T.B தரிப்பிடத்திற்கு பின் புறமாக 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக் கடைகளும்
10. யாழ். வெலிங்ரன் சந்திக்கு அண்மையில் 30 அடி அகலமும் 150 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும்
11. யாழ். கஸ்தூரியார் வீதியில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட கடையும்
12. யாழ். கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 3 பரப்புக் காணியும்
13. யாழ். நல்லூர் குறொஸ் றோட்டில் 10 பரப்புக் காணியும்

உடன் விற்பனைக்கு உண்டு. (C-1804)

தொடர்புகளுக்கு : 077 723 2535


## பதவி விலகிய கில்லெஸ்பி மீண்டும் சிக்கலில் பாகிஸ்தான்



பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியை கில்லெஸ்பி இராஜினாமா செய்துள்ளார். தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ரி-20 தொடரில் பாகிஸ்தான் அணி விளையாடி வருகிறது.

நேற்று முன்தினம் டெஸ்ட் அணி தென்னாபிரிக்காவுக்கு புறப்படுவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னர் தலைமைப் பயிற்சியாளர் ஜேசன் கில்லெஸ்பி தனது பதவியை இராஜி னாமா செய்தார்.


அவர் தனது உதவிப் பயிற்சியாளர் டிம் நீல்சனின் ஒப்பந்தத்தை, பாகிஸ் தான் வாரியம் புதுப்பிக்க மறுத்ததைத் தொடர்ந்து இந்த முடிவை எடுத்ததாக கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து டெஸ்ட் அணியின் இடைக்கால தலைமைப் பயிற்சியாளராக ஆகிப் ஜாவித் நியமிக் கப்பட்டுள்ளார்.

முன்னதாகக் கருத்து வேறுபாடு காரணமாக ஏற்கனவே கேரி கிறிஸ் டன் தனது பயிற்சியாளர் பதவியை இராஜினாமா செய்தார் என்பது குறிப் பிடத்தக்கது. (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3275


**சனா**




**மிது**




**லதுர்சன்**




**இந்து**




**மிதுனா**




**கவினா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இறக்குமதி செய்யப்பட்டதில்

# 75,000 கிலோ அரிசி பாவனைக்கு தகுதியற்றது

## பரிசோதனை முடிவில் சுகாதாரத்துறை தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி பிரச்சினைக்கு தீர்வாக, அரசாங்கம் அரிசி இறக்குமதிக்கு அனுமதித்ததன் பின்னர் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட அரிசியில் 3 கொள்கலன்களில் இருந்த 75,000 கிலோகிராம் அரிசி பாவனைக்கு தகுதியற்றது என சுகாதாரத் திணைக்களம் கண்டு பிடித்துள்ளது. .

இதேவேளை இதுவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள 2,400 மெற்றிக் தொன் அரிசியில் 90 வீதமான அரிசிக்கு சுங்க வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளதாக சுங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 4 ஆம் திகதி முதல் அரிசியை இறக்குமதி செய்ய தனியார் இறக்குமதியாளர்களுக்கு அரசு அனுமதி அளித்தது.

அதன்படி நேற்றைய நிலவரப்படி தனியார் துறையினர் சுமார் 2,400 மெற்றிக் தொன் இறக்குமதி அரிசியை இலங்கைக்கு கொண்டு வந்து கொழும்புத் துறை முகத்தில் இறக்கியுள்ளனர்.

எதிர்வரும் 20ஆம் திகதி வரை இலங்கைக்கான அரிசியை இறக்குமதி செய்ய அனுமதியுள்ளதாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் திரு.சிவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அரிசியின் தரம் சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் பரிசோதிக்கப்படுகிறது.

இதன்படி, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கையிருப்பு அடங்கிய 3 கொள்கலன்களில் சுமார் 75,000 கிலோகிராம் அரிசி பாவனைக்கு தகுதியற்றது என சோதனைகளில் தெரியவந்துள்ளது.

அந்த அரிசியில் புழுக்கள் இருந்தமை தெரியவந்துள்ளது. 3 கொள்கலன்களில் பொருத்தமற்ற அரிசி இறக்குமதி செய்யும் நிறுவனத்திடம் மீள ஒப்படைக்கப்படும் அல்லது அழிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

## சீரற்ற காலநிலையால் யாழில் 207 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் யாழ்ப்பாண மாவட் டத்தில் 63 குடும்பங்களைச் சேர்ந்த 207 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

குறித்த அனர்த்தங்களின் போது யாழ்ப்பாண மாவட்டத் தில் ஏழு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்ததாக அனர் த்த முகாமைத்துவப் பிரிவு அறிக்கையிட்டுள்ளது.

அதிகபட்சமாக சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 135 பேரும் காரைநகர் பிரதேச செயலாளர்பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 54 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரி வித்துள்ளார். (நி-8-33)

## சங்கடஹர சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 18.12.2024 புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜைகள் நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வரும் காட்சி இடம்பெறும்.

தொடர்ந்து பிள்ளையார் கதை படிப்பும் நடைபெறும் என ஆலய பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி-8)

## சபாநாயகரின் இராஜினாமாவை ஏற்றுக்கொண்டார் ஜனாதிபதி

(கொழும்பு)

அசோக ரன்வல சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்வது தொடர்பான கடிதத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத்குமா நாயக்க, பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தனது கல்வித் தகுதி தொடர்பில் சமூகத்தில் எழுந்துள்ள சர்ச்சை காரணமாக சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்ததாகவும் தற்போது அந்தத் தகுதிகளுக்கான ஆவணங்களை சமர்ப்பிக்க முடி யாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால், தனது கல்வித் தகுதி தொடர்பாக எந்த பொய்யான தகவலையும் தெரிவிக்கவில்லை எனவும் அசோக ரன்வல தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (நி-8)

## வேலைவாய்ப்பிற்காக 3 லட்சம் பேர் வெளிநாடுகளில்

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 3 லட்சத்திற்கும் அதிகமானோர் தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நேற்று முன்தினம் வெளியிட்ட தரவுகளுக்கு அமைய 300,162 இலங்கையர்கள் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காகச் சென்றுள்ளனர்.

அவர்களில் 177, 804 ஆண்களும் 122, 358 பெண்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் சென்றவர்களில் பெரும்பாலானோர் குவைத் துக்கு சென்றுள்ளனர்.

இந்த வருட இறுதிக்குள் சுமார் 311,000 பேர் தொழில் வாய்ப்புக்காக செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-8)

**வீடு வாடகை**

உடயகதிர்காமம் கோவிலுக்கு அருகாமையில், மந்திகை வைத்தியசாலையில் இருந்து 1 KM தூரத்தில்வீடு வாடகைக்குண்டு.

**நிறுவனங்கள்/வைத்தியர்/வைத்திய தாதியர் குடும்பங்கள் விரும்பத்தக்கது.**

தொடர்பு: 078 379 7998
071 838 7393

**31 ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்**

எமது கழக அங்கத்தவர்களான
**திரு.சி.அழகரத்தினம், திரு.சி.ஜீவரத்தினம்**
ஆகியோரின் அன்புத் தாயார்
அமரர்.
**சின்னவன் சீதேவிப்பிள்ளை**



அவர்கள் 15.11.2024 அன்று
இறைபதமடைந்துவிட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதுடன்
அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
(C-1793)

மலர்வு : 14.11.1944
உதிர்வு : 15.11.2024

நாவற்காடு குடமியன் கிராமிய தற்சார்பு வளர்ச்சிக் கழகம்.

# இராசிபலன்

15.12. 2024
கார்த்திகை 30, ஞாயிற்றுக்கிழமை
பூரணை பிற்பகல் 3.16 மணிவரை

மிருகசீரிடம் பின்னிரவு 3.44 மணிவரை
சுபநேரம் - 9.21-10.51 மணிவரை
இராகுகாலம் 4.51-6.21 மணிவரை

பூரண விரதம்
சந்திராஷ்டமம் - சுவாதி

**வளவன்**

**மேஷம்:** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**ரிஷபம்:** எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்று செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மிதுனம்:** விரயங்கள் ஏற்படா திருக்க விழிப்புணர்வு அவசியம், இடமாற்றம், ஊர்மாற்றம் என்பன இடம்பெறலாம், குலதெய்வ வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்:** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம்.

**சிம்மம்:** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உற்ற நண்பர்கள் உறுதுணையான இருப்பர், போசன சுகமுண்டு.

**கன்னி:** வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், தேடிச்சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**துலாம்:** பொது வாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், வரவும் செலவும் சமமாகும்.

**விருச்சிகம்:** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் வருகையால் உற்சாகம் அடையும் நாள், கௌரவமான நாள்.

**தனுசு:** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்:** மறைமுகப் போட்டிகள் மாறும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீதான பாசம் கூடும்.

**மீனம்:** குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**விட்டுக் கொடுக்காதவர்கள் தங்களையே இழந்து விடுவார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை சமுத்திரப் பல்கலைக் கழகத்தின் கற்கைநெறிகளில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இலங்கை சமுத்திர பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கோ.அருள்சிவம் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், இலங்கை சமுத்திரப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்த இரட்நாயக்கவும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். (படம்:-சிவசாந்தன்)


## மணமகன் தேவை

1995, இந்து, ரோஹினி, TEACHER பூர்வீகம்-யாழ்ப்பாணம், வதியுமிடம்-கிளிநொச்சி மணமகள் பதிவு இல: 11215. தரகர் கூலி இல்லை. பதிவுக்கட்டணம் மட்டுமே.

இணையவழி திருமணசேவை
அழையுங்கள்- 076 664 9401 (C-010)
www.EQMarriage Service.com

## மணமகள் தேவை

1987, இந்து ஸ்வாதி, CIVIL ENGINEER பூர்வீகம்-உசன், வதியுமிடம்-LONDON மணமகன் பதிவு இல: 11274. தரகர் கூலி இல்லை. பதிவுக்கட்டணம் மட்டுமே.

இணையவழி திருமணசேவை
அழையுங்கள்- 076 664 9401 (C-010)
www.EQMarriage Service.com


# யாழ்.மாநகரசபை
## வரியிறுப்பாளர்கள் கவனத்திற்கு!

(யாழ்ப்பாணம்)

வரியிறுப்பாளர்கள் தமது ஆதனங்களுக்கான 2025 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியினை ஜனவரி 31 ஆம் திகதிக்குள் செலுத்தி 10% கழிவினையும் காலாண்டிற்கான ஆதனவரியினை அக்காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தி 5% கழிவினையும் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேலும் யாழ்.மாநகர வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3 மணிவரையும் வார இறுதி நாட்களிலும் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையும் ஆதன வரியினைச் செலுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டிற்கான ஆதன வரி அறிவித்தல் (K form) கிடைக்கப் பெறாதவர்கள் இதற்கு முன்னைய ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல் அல்லது முன்பு ஆதனவரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு அல்லது ஆதனம் அமைந்துள்ள வட்டாரம், வீதி மற்றும் ஆதன இலக்கம் போன்ற விபரங்களை சமர்ப்பித்தும் 2025 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியைச் செலுத்த முடியும்.

இதேபோன்றே கடந்த காலங்களுக்கான ஆதனவரி நிலுவைகளையும் செலுத்துவதன் மூலம் ஏனைய சேவைகளையும் இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும். 2024 ஆம் ஆண்டின் ஆதன்வரிப் பெறுமதியிலும் கட்டணங்களிலும் மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை.

ஆதனவரி அறிவித்தல்கள் கிடைக்கப் பெறாதவர்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 0212217697 என்ற தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்தனர். (நி-8)

# தையிட்டி விகாரையை அகற்றக்கோரி போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தையிட்டி பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக்கோரி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் முதல் நேற்று சனிக்கிழமை மாலை வரை இப்போராட்டம் இடம் பெற்றது.

தையிட்டியில் தமிழ் மக்களது காணிகளை இராணுவம் சட்ட விரோதமாக ஆக்கிரமித்து உரிய அனுமதிகள் எதுவுமின்றி சட்ட விரோதமாகக் கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்றிக் காணிகளை உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டுமென வலியுறுத்தி கடந்த 18 மாத காலமாக தொடர்ந்த இப்போராட்டம் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நேற்றும் தொடர்ச்சியாக இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (நி-8-33)


## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2025 ஆம் ஆண்டுக்கான அறிவித்தல்

1. நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் பொது அறிவித்தலானது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.
2. நகரசபை கட்டளைச் சட்டத்தின் 160 (3) ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப் பெறுமதியின் 10% ஆன வரியொன்றினை 2025 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, யூன் 30, செப்ரெம்பர் 30 மற்றும் டிசம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாய தவணைகள் மூலம் செலுத்தப்பட வேண்டும்.
3. 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வருடாந்த ஆதனவரி முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும். குறித்த கந்தாயத்திற்குரிய கட்டணம் அக்கந்தாயத்தின் முதல் மாதத்திற்குள் செலுத்தப்பட்டால் 5% கழிவு அனுமதிக்கப்படும்.
4. மேற்சொல்லப்பட்ட பந்தி - 1 இன் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் ஆதனவரி செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள், வதிவிடங்கள் மீது 15% உம் ஏனைய இடங்கள் மீது 20% உம் விறாந்துக்கட்டணம் அறவிடப்படும்.
5. ஆதனவரி சார்பாக சகல ஆட்சேபனைகளையும் ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக 31.01.2025 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இவ் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.
6. சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்கள் அனைத்தும் 2025 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமம், வியாபார வரிக்கட்டணங்களைச் செலுத்தி 31.03.2025 காலப்பகுதிக்குள் உரிமம், பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வியாபார உரிமம் பெற்றுக்கொள்ளாத, வியாபார வரி செலுத்தாத வியாபார நிலையங்கள் அனைத்தும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும்.
7. 2025 ஆம் ஆண்டிற்கான விளம்பர கட்டணங்களை செலுத்தி விளம்பரங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும். புதிதாக அமைக்கப்படும் விளம்பரங்கள் அனுமதி பெற்றே காட்சிப்படுத்தப்பட வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் நகரசபையினால் அகற்றப்படும்.
8. 2025 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி உரிமத்தகடுகளையும் வளர்ப்பு நாய்களுக்கான பதிவுகளையும் உரிய கட்டணங்கள் செலுத்தி மேற்கொள்ளவும்.
9. ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச்சொந்தக்காரர்கள் பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை நகரசபையில் சமர்ப்பித்து பெயர்மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும்.
10. நகரசபைக்கு உட்பட்ட தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், எல்லைச்சுவர், குழாய்க்கிணறுகள் அமைப்பதாயின் அனுமதி பெற்று அமைக்கப்படல் வேண்டும். கட்டடத்தினை புனரமைப்பதாயினும் நகரசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ள வேண்டும். கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்க வேண்டும். கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் நகரசபையுடன் தொடர்பு கொண்டு அமைவுச்சான்றிதழ் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி அமைவுச் சான்றிதழை (COC) பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.
11. நகரசபைக்குட்பட்ட நிலங்கள் பிரிக்கப்படும் போதோ அல்லது ஒன்றிணைக்கப்படும் போதோ நகரசபையின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். பிரிக்கப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்ட நிலத்தின் நில அளவைப்படத்திற்கான அனுமதியினை பெற்ற பின்னரே குறித்த ஆதனத்தில் அபிவிருத்தி வேலைகளையோ விற்பனை செயற்பாட்டினையோ மேற்கொள்ள முடியும்.
12. 2000 ஆம் ஆண்டு 22 ஆம் திகதிய 11159/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
13. பொது மக்கள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் திண்மக்கழிவுகளை நகரசபைக்கு ஒப்படைக்கும் போது தரம் பிரித்து வழங்க வேண்டும் என்புதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்படல் வேண்டும்.

செயலாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

(C-1797)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
Viber 076 636 3378
நாதம் 471



# இளையோரை வழிப்படுத்தத் தவறினால்...?



அபிமன்யு

**2009 இற்கு முற்பட்ட காலம் 2009 இற்கு பிற்பட்ட காலம் என்று காலத்தை இருவேறாகப் பிரித்துப் பார்த்தால், எம் தமிழ் பண்பாடு-கலாசார மாற்றங்களையும்-சிதைவுகளையும், போதைவஸ்துப் பாவனைகளையும், சட்ட விரோத செயல்களையும், வாள் வெட்டு, சண்டித்தனக் கலாசாரத்தையும் வடக்கின் கல்வி வீழ்ச்சியையும் கண்டு கொள்ளலாம்.**

கடந்த வாரம் நடந்த உண்மைச் சம்பவம் ஒன்று: கடும் மழை பெய்து ஓய்ந்திருந்தது. நான் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தேன். நடு வீதியில் ஒரு விளாம்பழம் நொருங்கிக் கிடந்தது. அதை ஒரு அணில் கொறித்துக் கொண்டிருந்தது.

எனது மோட்டார் சைக்கிளைக் கண்டதும் அந்த அணில் வீதி ஓரத்திற்கு ஓடி விட்டது.

சென்ற வேலை முடிந்து மீண்டும் திரும்பி வந்து கொண்டிருந்தேன். நடுவீதியில் இருந்த அந்த நொருங்கிய விளாம்பழத்தை பத்து வயது மதிக்கத் தக்க ஒரு சிறுவன் எடுத்துக் கொண்டிருந்தான்.

நான் எனது மோட்டார் சைக்கிளை நிறுத்தி, அந்தச் சிறுவன் விளாம்பழத்தை ஏன் எடுக்கிறான் என அவதானித்தேன்.

அவன் பொறுக்கி எடுத்த விளாம்பழத்தை வீதியோரத்தில் இருந்த மரத்தின் இலையின் மேல் வைப்பது கண்டு ஆச்சரியத்துடன் அவனிடம், 'தம்பி ஏன் அந்த விளாம்பழத்தை வீதியோரம் வைக்கிறீர்கள்?' என்றேன்.

அதற்கு அந்தச் சிறுவன் கூறினான் 'அணில் ஒன்று அந்த விளாம்பழத்தை சாப்பிடுது. றோட்டில ஆக்கள் வர, வாகனங்கள் வர பயந்து ஓடிப்போய் ஒழிச்சிருந்திட்டு திரும்பவும் வந்து அதைச் சாப்பிடுது. அதுதான் அதை எடுத்து றோட்டுக் கரையில வைச்சன். இனி அது பயமில்லாமல் சாப்பிடும்' என்றபடி மிகவும் மகிழ்வாக ஓடிச்சென்றான்.

அந்தக் கணம் ஆறடி வளர்ந்திருந்த நான் அவன்முன்னே கூனிக் குறுகி நின்றேன்.

அறுபது கழுதை வயதான என்னிடம் இல்லாத அன்பு, கருணை, ஈகை போன்ற நற்பண்புகள் அவனிடம் இருப்பதை எண்ணி வியந்தேன். இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்று பூரித்தபடி நான் புறப்பட்டேன்.

இப்படிப்பட்ட சிறுவர்கள் உருவாகும் சமூகம் எப்படிப் பிழைத்துப் போகிறது என்ற தேடலை நாம் ஆரம்பிக்க வேண்டும்.

இதற்கு எமது சமூகமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். ஏனென்றால் சமூகத்தின் அத்தனை நல்ல பண்புகளுடனும் வளரும் பிள்ளையை அவனின் சூழல் மாற்றி விடுகிறது.

அவனை, அவனின் குண இயல்புகளை கொஞ்சம் கொஞ்சமாய்க் குடைந்து அவனுள் புதிய மனிதன் புகுத்தப்படுகிறான். அனைத்துத் தவறுகளையும் நாம் செய்துவிட்டு தவறுக்குப் பின் வசை பாடி பயனேதும் ஆகிவிடப் போவதில்லை.

அண்மையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்த பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தியைச் சந்தித்து தன்னை Sir எனக் அழைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

அதற்கு அவர் மறுக்கவே. இல்லை நான் யார் தெரியுமா? என்னை நீங்கள் Sir எனக் கூறித்தான் ஆக வேண்டும் என அவரிடம் முரண்பட்டிருந்தார்.

இவ்விடயம் ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது சாவகச்சேரி வைத்தியசாலை விடயத்தில் ஒரு வைத்தியர், வைத்தியர் அர்ச்சுனாவை Sir என அழைக்கும்படி கூறிய ஒலிப்பதிவு வெளியாகிய போது அது தொடர்பில் குறித்த வைத்தியரை பலரும் எதிர்த்திருந்தனர். அவர் தொடர்பில் பல்வேறு விமர்சனங்களை வெளியிட்டு வைத்தியர் அர்ச்சுனாவிற்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

வைத்தியர் அர்ச்சுனா பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வந்ததும் ஏலவே தன்னை Sir என்று கூறச் சொன்ன குறித்த வைத்தியரிடம் சென்று இப்போது என்னைச் Sir எனக் கூறுமாறு கேட்டிருந்தால் அதில் ஏதோ ஒரு வகையில் நியாயம் இருந்திருக்கும்.

ஆனால் அவரோ யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் சென்று தன்னை Sir என அழைக்கும்படி முரண்பட்டிருக்கிறார்.

இதுதான் இன்றைய சமூகத்தின் வெளிப்பாடு என்றால் அதில் மாற்று கருத்துக்கு இடமேதும் இல்லை.

நமது எண்ணங்களும் செயற்பாடுகளும் நம்மைப் பற்றியும் நமது சமூக எண்ண ஓட்டங்கள் பற்றியும் பிரதிபலிக்க வேண்டும். இல்லையேல் அது தவறான பாதைக்கே இட்டுச் செல்லும்.

இவ்வாறான சமூகத்தில் வளரும் பிள்ளைகளை அவர்கள் தவறு செய்கிறார்கள் என்று குறை கூறுவதில் எந்த நியாயமும் இல்லை.

அவர்களை வழிப்படுத்த வேண்டிய பெரியவர்களாகிய நாம் எவ்வாறு நடந்து கொள்கின்றோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

போதைவஸ்துப் பாவனையில் பாதிக்கப்பட்ட எத்தனை இளைஞர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள் என்பது எங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்.

பதின்ம வயது இளைஞர்கள் போதைக்குள் மாண்டு தங்கள் எதிர்காலத்தைக் தொலைத்து விட்டு குற்றுயிரும் கொலையுயிருமாய்க் கிடக்கின்றார்கள்.

எமது இனத்தின் பாரம்பரிய கட்டமைப்பு மிகப்பலம்வாய்ந்தது. ஏனைய இனங்கள் விருப்புக் கொள்ளக்கூடிய பல விடயங்கள் எமது சமூகக் கட்டமைப்புக்குள் புதைந்து கிடக்கின்றன.

இவற்றை அழிவடையாது சிதைவுறாது பாதுகாக்க வேண்டியது எம் ஒவ்வொருவருடைய கடமை.

உலகே பார்த்து வியந்து நிற்கும் வீரம் இருந்தும் இன்று தமிழினம் ஒரு நல்ல தலைவன் இல்லாது தவித்துக் கொண்டிருக்கிறது.

இந்நிலையைப் பயன்படுத்தி தீய சக்திகள் எம் இனத்தின் பண்பாடு, கலாசாரத்தை சிதைத்து அதனூடே எமது இனத்தை வலுவிழக்கச் செய்யும் முனைப்பில் முன்னேறுகிறார்கள்.

இவ்வேளையில், 2009 இற்கு முற்பட்ட காலம் 2009 இற்கு பிற்பட்ட காலம் என்று காலத்தை இருவேறாகப் பிரித்துப் பார்த்தால், எம் தமிழ் பண்பாடு-கலாசார மாற்றங்களையும்-சிதைவுகளையும், போதைவஸ்துப் பாவனைகளையும், சட்ட விரோத செயல்களையும், வாள் வெட்டு, சண்டித்தனக் கலாசாரத்தையும் வடக்கின் கல்வி வீழ்ச்சியையும் கண்டு கொள்ளலாம்.

இதற்காகவா எம் முன்னோர்கள் பாடுபட்டனர்? இதற்காகவா எம் தந்தையர் இரவு பகல் பாராது உழைத்தனர்? இதற்காகவா ஈழத்து அன்னையர் பத்துமாதம் தவமிருந்து எம்மை ஈன்றெடுத்தனர்? இதற்காகவா ஆயிரம் ஆயிரம் வீரமறவர்கள் தம் உயிரைத் துச்சமென மதித்து மண்பற்றுக்காய் உயிர் விட்டனர்? இவற்றைச் சிந்திக்க வேண்டியது எம் இளம் சமூகம் மட்டுமல்ல. அவர்களை வழிப்படுத்தும் பெரியவர்களாகிய நாமும் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். அந்தண சிரேஷ்டர் வேதாகம வித்தியாபூசணம் பிரம்மஸ்ரீ விஸ்வநாராயண சர்மா (விஸ்வநாத ஐயர் சோமசுந்தர ஐயர்) தேகவியோகம் அடைந்துவிட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த துயரடைகின்றோம்.

வேதமந்திரங்களில் மிகுந்த புலமை உடைய சிவாச்சாரியார் கொழும்பில் இறந்த போது அவருக்கு அங்கு பெருந்திரளான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

அதேபோல தெல்லிப்பழையில் அவரின் இறுதி நிகழ்வு நடந்த போதும் அங்கும் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு தங்களின் இறுதி வணக்கத்தை செலுத்தினர்.

அத்தகு சிறப்பு மிக்க சிவாச்சாரியாருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** அநுரவின்ர அரசாங்கத்தில யாழ்ப்பாண மாவட்டத்தின்ர முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 13 ஆம் திகதி நடந்ததல்லோ. அமைச்சர் சந்திரசேகர் தலைமையில் நடந்த அந்தக் கூட்டத்தில ஏதேனும் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டதோ.

**விதானையார்:-** பொதுவில எங்கட வட மாகாணத்தில நடக்கிற கூட்டங்களில தேவையில்லாத விடயங்களைக் கதைத்துக் காலத்தை வீணடிக்கிறது தான் வழமை.



அந்தண சிரேஷ்டர் வேதாகம வித்தியா பூசணம் பிரம்மஸ்ரீ விஸ்வ நாராயண சர்மா

முன்பெல்லாம் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அப்போதைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் எங்கட தமிழ் எம்பிக்களும் சண்டை பிடிப்பதிலேயே காலம் கடத்துவர்.

அதிகாரிகளும் அதை வேடிக்கைபார்ப்பினம். இதனால மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் பற்றிப் பேச முடியாமல் போனதுண்டு.

ஆனால், இப்ப புதிய அரசு, புதிய அமைச்சர், புதிய ஆளுநர் எண்டால் அங்கயும் ஒரு தமிழ் எம்.பி ஒரு பெண் அதிகாரியை அன்ரி எண்டு அழைத்து நிலைமையை மோசமாக்கியதாகக் கேள்வி.

**மூப்பர்:-** அதிகாரிகளை இப்படி நலினப்படுத்தினால் எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

**வாத்தியார்:-** உண்மை தான். அதிகாரிகளை நாங்கள் நலினப்படுத்துவோமாக இருந்தால், அவர்களூடாக வினைத்திறனுடைய சேவையைப் பெறமுடியாமல் போகும்.

எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் அடிக்கடி சொல்லுற ஒரு விடயம்; எங்கட அதிகாரிகளை நாங்களே பலவீனப்படுத்தக் கூடாது எண்டு.

அவ்வாறு பலவீனப்படுத்திவிட்டால், அவர்களின் இடங்களுக்கு நாங்கள் விரும்பாதவர்கள் தான் வந்து சேருவினம்.

ஆகையால எங்கட விமர்சனங்கள், குறித்த நிர்வாகத்தை வலுப்படுத்துவதாக- செம்மைப்படுத்துவதாக இருக்க வேண்டுமே தவிர, இருக்கிறதையும் கெடுத்துவிடுகிறதாக இருக்கக் கூடாது.



## அதிகாரிகளை மதியுங்கள் அதிகாரிகளும் மதியுங்கள்

**பண்டிதர்:-** அதெண்டால் உண்மை தான். யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தியின்ர காலத்தில எங்கட போதனா வைத்தியசாலை அபரிதமான வளர்ச்சியடைந்தது என்பதை நாங்கள் ஒரு போதும் மறந்து விடக் கூடாது.

அதேநேரம் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பணியாற்றுகின்ற ஒரு வைத்தியசாலையை நிர்வகிக்கிற தென்பதும் சாதாரணமான விடயமல்ல.

அதிலும் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் துணை மருத்துவ சேவையாளர்கள் மற்றும் இதர பணியாளர்களின் ஒத்துழைப்புத் தாராளமாகக் கிடைக்கும் போது தான் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்தை திறம்பட நடத்த முடியும்.

இந்த உண்மையை நாங்கள் மறந்து விடக் கூடாது.

ஆகையால ஓர் அரச கட்டமைப்பை செம்மையாக நிர்வகிப்பதற்கான ஏற்பாடுகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்குகின்ற மனநிலையோடு தான் அரசியல் தரப்புக்கள் உட்பட அனைத்துத் தரப்பும் செயற்பட வேண்டும்.

இதைவிட்டிட்டு தங்கட, தங்கட தனிப்பட்ட பகைமைகளை வஞ்சிக்க நினைப்பது அவ்வளவு நல்லதல்ல.

அவ்வாறான நிலைமையை வலிந்து ஏற்படுத்தி விட்டால், பிறகு பாராளுமன்ற உறுப்பினர்களின்ர கௌரவமும் காற்றில பறக்கும்.

ஆகையால அனைவரும் மற்றவர்களுடைய கௌரவங்களைப் பாதுகாத்து; தங்களுடைய கௌரவத்துக்கு ஈனம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**சாத்திரியார்:-** பண்டிதர் சொல்லுறது நூறுவீதம் உண்மை. அதேநேரம் உயர் அதிகாரிகளை, மருத்துவர்களை அதட்டக் கூடிய ஒருவர் தேவை என்ற மனநிலை எங்கட சாதாரண மக்களிட்ட இருக்குது என்பதையும் நாங்கள் மறந்துவிடக்கூடாது.

**சிறாப்பர்:-** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:-** பொதுவில எங்கட அதிகாரிகளில பெரும்பாலானவர்கள் ஏழை மக்களுக்கு உதவுவதில் பின்னடிக்கிறவர்கள் என்பது உண்மை.

ஒரு பிறப்புச் சான்றிதழை எடுக்கிறதில கூட சாமானிய மக்கள் கடும் கஷ்டங்களை அனுபவிக்கினம். அவர்களை அரச உத்தியோகத்தர்களும், அரச அதிகாரிகளும் அலக்கழிக்கினம்.

இதேபோல மருத்துவத்திலும் தத்தம் கடமையை உரியவர்கள் செய்யத் தவறுகினம். அதைவிட, ஏழை மக்கள் எண்டால் போதும் அவர்களை எப்படியும் ஏசலாம். தூற்றலாம் எண்ட நிலையும் இருக்கத்தான் செய்யுது.

இந்த இடத்தில தான் பாதிக்கப்பட்ட சாதாரண மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை, மருத்துவர்களை கண்டபாட்டில் ஏசக்கூடிய- அவர்களின் கௌரவத்துக்கு ஈனம் விளைவிக்கக் கூடிய ஒருவர் தேவை எண்டு நினைப்பதோட அத்தகையவரின்ர செயற்பாடுகளுக்குத் தங்கட பரிபூரண ஆதரவையும் அந்த மக்கள் வழங்குகினம்.

அரச அதிகாரிகள் மற்றும் மருத்துவர்களுக்கு மக்கள் வழங்கிய மதிப்பை- கௌரவத்தை சம்பந்தப்பட்டவர்கள் உதாசீனம் செய்து, மக்களை வஞ்சித்த போது, இந்த உயர் மட்டத்தை தாழ்த்த வேண்டும் என்ற மன உணர்வு மக்களிட்ட ஏற்படுவது தவிர்க்க முடியாததே.


ஆகையால இனிமேலாவது அரச அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், மருத்துவத்துறை சார்ந்தவர்கள் தங்களின் பணியை மக்கள் சேவையாகச் செய்ய வேணும்.

அப்படிச் செய்தால், இந்தத் தற்காலிக மனவருத்தங்கள், சலசலப்புகள் எம் சமூகத்தைவிட்டு விலகிப் போகும்.

இவ்வாறு சாத்திரியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்வில் தோல்விகள் நிரந்தரமா வியாசரே. மனம் தோல்விகளால் துவண்டு போகிறது?






வியாசரே இன்னும் இரண்டு வாரத்தில் இந்த வருடம் முடிந்து விடுமல்லவா?

**விஜயகுமார் — முகமாலை**

**இனவாதம் நீங்கினால் இலங்கைக்குமீட்சி உண்டாகுமா வியாசரே?**

நூறு விகிதம் உண்மை. ஆனால் அந்தப் பூனைக்கு மணி கட்டுவது யார் என்பது தானே இன்றைய கேள்வி.

விளக்கு எரிவதற்கு எவ்வளவுக்கு எவ்வளவு எண்ணெய் தேவையோ அதே போல அரசியல்வாதிகளுக்கு தங்களின் அரசியல் இருப்பிற்கு இனவாதம்-மதவாதம் தேவை என்று கருதுகிறார்கள். ஆதலால் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் இன-மத வாதத்தைத் கொட்டித் தீர்த்து விடுகிறார்கள்.,

இதில் பாதிக்கப்படுவது அப்பாவிப் பொது மக்களே.

**சுதன் — குப்பிழான்**

**எங்கள் அரசியல் உரிமைகளை பெரும்பான்மை அரசுகள் ஒடுக்குவது ஏன் வியாசரே?**

பெரும்பான்மை அரசுகள் தமிழினத்துக்கான, அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தீர்வுத்திட்டத்தை முன்மொழிந்தார்களா என்று கேட்டால் இல்லை என்பது தான் பதில்.

அந்தளவிற்கு காலம்காலமாக வந்த அரசுகள் தமிழினத்தை ஏமாற்றியதைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை.

இதற்கு எமது தமிழ் அரசியல் தலைவர்களும் ஒரு காரணம் என்பதே உண்மையானது.

அரசுகளின் இந்த நிலையில் மாற்றம் ஏற்படப்போவதில்லை. வேண்டுமென்றால் தமிழினத்தின் மனங்களில் மாற்றம் ஏற்படலாம். இதுவே முடிவானது. தமிழர் நிலையோ கேள்விக்குறியானது.

**தாவீது — மந்துவில்**

**அன்பை உதாசீனம் செய்தால் என்னவாகும் வியாசர் பெருமகனாரே?**

ஒருவர் நம்மில் உண்மையான அன்பு வைத்திருக்கிறாரா? இல்லையா? என்பதை அறிய வேண்டும் என்றால் அவருடன் முரண்பட்டாலே போதுமானது.

அவர் எம்மை மற்றவர்களிடம் விமர்சிப்பாரெனின் அவரின், எம்மைப்பற்றிய புரிந்துணர்வு எவ்வளவு என்றும் அவர் அமைதியாய் இருக்கிறார் மற்றவர்களிடம் எம்மை விட்டுக்கொடுக்காது நடந்து கொள்கிறாரெனின் அவரின் அன்பின் ஆழத்தையும் அறிந்து கொள்ளலாம்.

அன்பால் பழகும் பலர் முறிவின் பின் அவர்களை விமர்சிக்கவே செய்கிறார்கள்.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS, Whats app செய்யுங்கள்**

**சதீஸ்கரன் — யாழ்ப்பாணம்**

**வாழ்வில் தோல்விகள் நிரந்தரமா வியாசரே. மனம் தோல்விகளால் துவண்டு போகிறது?**

சிறிய நத்தைகள் சுவரில் ஒட்டியிருப்பதை அவதானித்திருப்பீர்கள். அவற்றை தட்டி கீழே வீழ்த்தி விடுங்கள். அடுத்த நாள் அதே நேரம் மீண்டும் நீங்கள் தட்டிவிட்ட இடத்தில் அவை இருப்பதை அவதானிப்பீர்கள்.

மிகச் சொற்ப இடத்தை அடைய அவை நீண்ட நேரத்தை செலவிட்டாலும் ஒரு நாளும் தன் முயற்சியில் இருந்து சோர்ந்து விடுவதில்லை. இந்த மகா உண்மையையும் முயற்சியையும் மனிதன் புரிந்து கொண்டால் தற்கொலைகளும் தாழ்வுச் சிக்கல்களும் எழாது.

**மதுவன் — மீசாலை**

**உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது என்பது பற்றிக் கூற முடியுமா வியாசரே?**

“செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சேராத இடம் தேடி வஞ்சத்தில் வீழ்ந்தாயடா கர்ணா வஞ்சகன் கர்ணனடா.”

கர்ணனின் உடலை அம்புகள் சல்லடை போட்ட நிலையிலும் அவன் செய்த தர்மத்தால் அவன் உயிர் பிரியாதிருக்க, கண்ணன் அந்தணர் வேடம் பூண்டு வந்து கர்ணனிடம் நீ செய்த தர்மத்தை எனக்கு அளிப்பாயா என்று கேட்டு வாங்கி கர்ணனின் உயிர் பிரிய காரணமானான்.

**தூரி — நவிண்டில்**

**சிறுவயதிலேயே வாழ்க்கையில் முன்னேறுவது எப்படி என்று கூற முடியுமா வியாசரே?**

பிள்ளை வளர்ப்பு என்பது ஒரு கலை. இப்போதைய பெற்றோருக்கு அந்தக் கலை அறவே தெரியாது. பிள்ளைகளுக்கு அன்பையும் பரிவையும் பொறுமையையும் பொறுப்புக்களையும் சொல்லிக் கொடுக்கத் தவறும் நாம், காலை 6 மணியிலிருந்து 7 மணிவரை தனிப்பட்ட வகுப்பு, 7.30 மணியில் இருந்து 1.30 மணி வரை பாடசாலைக்கல்வி, 3 மணியில் இருந்து 6 மணிவரை ரியூசன் படிப்பு, மாலை 6 மணியிலி ருந்து இரவு 11 மணிவரை வீட்டுப்படிப்பு. இவ்வாறு நிலை இருந்தால் சிறுவர்களால் வாழ்வில் முன்னேறும் அனுபவக்கல்வியைக் கற்க முடியுமா? சொல்லுங்கள்.

**அன்பு — சித்தன்கேணி**

**வியாசரே தங்களின் தத்துவத்திற்கு நான் அடிமை. ஒரு தத்துவம் கூற முடியுமா?**

கேள்விகள் எளிதாக இருக்கின்றன என்பதற்காக தேவையில்லாத கேள்விகளுக்கு நாம் பதிலளிப்போமாக இருந்தால், பதில் அளிக்க முடியாத கேள்விகளுக்கும் பதில் சொல்லியாகவே வேண்டும் என்ற கட்டாயத்திற்குத் தள்ளப்படுவோம்.

**இந்து — வதிரி**

**வியாசரே இன்னும் இரண்டு வாரத்தில் இந்த வருடம் முடிந்து விடுமல்லவா?**

அட ஆமாப்பா ஆமா!

நேற்றுத்தான் புதிய கலண்டரைச் சுவரில் கொழுவி முதல் மாத, முதல் திகதியைக் கிழித்தது போல இருக்கிறது. அதற்கிடையில் 2025 வந்து விட்டது. இந்த இடைப்பட்ட காலத்தில் வாழ்வில் கலண்டரை விட வேறு என்னத்தைக் கிழித்தோம் என்றே தெரியவில்லை.

**கோகுலராஜா - கஜீபன்**

**வியாசரே கடவுள் மனிதனைப் படைத்தானா? மனிதன் கடவுளைப் படைத்தானா?**

கடவுள் மனிதரைப் படைத்தான். மனிதன் கடவுளை வடித்தான்.

படைத்தவன் கல்லாய் உறைய, வடித்தவன் தெற்பை அணிய; அலங்காரம், அபிஷேகம் என்பன வடித்தவன் வேலையாய்ப்போக, படைத்தவனோ வடிவிழந்து, ஒளியிழந்து இருத்தலானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் சொற்களில் விதைக்கலாமா விஷம்!

**தகவல்தொடர்பில் குரலின் பங்கு முக்கியமானது. உத்தரவு, கிண்டல், குத்தல் போன்றவற்றை வார்த்தைகளில் கலக்காதீர்கள். என்ன பேசுகிறீர்கள் என்பதோடு, எப்படிப் பேசுகிறீர்கள் என்பதிலும் கவனம் செலுத்துங்கள்.**



வாகனங்கள் அளவுக்கு அதிகமாகப் புகையைக் கக்கினால் அபராதம் விதிக்கப்படுகிறது. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சுக்காற்று ஓர் அளவைத் தாண்டினால் தண்டனை உண்டு. இரசாயனக் கழிவுகள் நதிகளில் கலக்கும்போது தண்ணீர் நஞ்சாவது குறித்துப் பதறுகிறோம். ஆனால், நம்மில் பலரும் இதைவிட மோசமான ஒரு விஷத்தை சமூகத்தில் பரப்பிக்கொண்டிருக்கிறோம்.

இப்போதெல்லாம் toxic communication என்ற சொற்பதம் ஊடகங்களில் அடிக்கடி இடம் பெறுகிறது. எதிராளியின் பேச்சைக் கேவலப்படுத்துவது, பிறரைத் திட்டுவது, உருவகேலி செய்வது, தரம் தாழ்ந்த முறையில் விமர்சிப்பது போன்ற பல விதங்களில் நாம் தகவல் தொடர்பில் விஷத்தைப் பரப்புகிறோம். எந்தக் குற்ற உணர்வும் இல்லாமல் இதைச் செய்வதால் ஏற்படும் தீய விளைவுகளை உணராவிட்டால், அது ஒட்டுமொத்த சமுதாயத்துக்கே தீங்காகி விடும்.

விஷத்தன்மை வாய்ந்த தகவல்தொடர்பு பல சிக்கல்களை உண்டாக்கும். அது மோதல்களை அதிகரிக்கச் செய்யும், நம்பிக்கையைக் குலைக்கும், பழி உணர்ச்சியை மேலோங்கச் செய்யும், தாழ்வுமனப்பான்மையை அதிகரிக்கும்.

சரியான தகவல்தொடர்பு நமக்குத் தேவைப்படும் தருணங்கள் நம் வாழ்வில் நிறைய உள்ளன. வீசும் சொற்களில் விஷம் பரப்பும் மனிதர்கள், அந்த இயல்பு காரணமாக அந்தத் தருணங்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளத் தவறுகிறார்கள்.

01. திருமணத்துக்கு வரன் பார்த்து முடிவு செய்து, திருமணம் நடப்பதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட இருவரும் தனியாக சில முறை பேசிக்கொள்வது இயல்பு. இந்தப் பேச்சில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, நிச்சயிக்கப்பட்ட பல திருமணங்கள் நின்றுபோனதுண்டு.

02. ஒரு பணியில் சேர்வதற்கு முன் நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளவேண்டி இருக்கும். ஊதிய உயர்வு வேண்டும் என்று மேலதிகாரியிடம் கேட்கும் நிலை ஏற்படலாம். இதுபோன்ற தருணங்களில் இனிமையாகப் பேசாவிட்டால், வாய்ப்பு பறிபோகும்.

03. தவறு செய்யும் உறவினரையோ, நண்பரையோ, பொருத்தமான வார்த்தைகளைப் பயன்படுத்தி கவனமாகப் பேசித் திருத்த வேண்டிய சூழல் ஏற்படலாம். திசைமாறிப் போன இளைய தலைமுறையினரை மீண்டும் நல்வழிக்குத் திருப்ப வேண்டிய அவசியம் நேரலாம். இங்கு ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.


04. கோபத்தில் வெடிக்கும் வாடிக்கையாளரை சமாதானப்படுத்த வேண்டிய கட்டாயம் உண்டாகலாம். தாமதம் அல்லது சேவைக் குறைபாடு குறித்துக் கொந்தளிக்கும் ஒருவரிடம் காரணத்தை விளக்கி வருத்தம் தெரிவிக்க வேண்டிய சூழல் ஏற்படலாம். அவர் வெளிப்படுத்தும் அதே உணர்வை நாமும் வெளிப்படுத்தினால், எல்லாம் போச்சு. கவனம் அவசியம்.

இப்படி வாழ்வின் பல கட்டங்களை நாம் சந்திக்கும்போது தகவல்தொடர்பு என்பது மிக முக்கியப் பங்காற்றுகிறது. அது சரியாக இல்லை என்றால் விளைவு நாம் எதிர்பார்ப்பது போல் இருக்காது. அது வாழ்வையே நரகமாக்கலாம், நம் வாழ்வை மட்டுமல்ல, நம்மைச் சுற்றி உள்ளவர்களின் வாழ்வையும்கூட!

தகவல்தொடர்பில் குரலின் பங்கு முக்கியமானது. உத்தரவு, கிண்டல், குத்தல் போன்றவற்றை வார்த்தைகளில் கலக்காதீர்கள். என்ன பேசுகிறீர்கள் என்பதோடு, எப்படிப் பேசுகிறீர்கள் என்பதிலும் கவனம் செலுத்துங்கள். பிறரை விமர்சிக்கும்போதும், குற்றம் சுமத்தும்போதும், குரலின் தொனி குறித்து ஒரு முறைக்கு இரு முறை யோசியுங்கள்.

அடுத்தவரைக் குற்றஞ் சாட்டுவதைவிட, உங்களது தேவை என்ன என்பதைக் கொஞ்சம் மென்மையாகத் தெரிவிக்கலாம். பிறரது நல்ல விடயங்களை அவ்வப்போது பாராட்டினால், அவர்களைக் குறை கூறும்போது அது நஞ்சானதாகத் தெரியாது.

உங்கள் நெருங்கிய நண்பர்கள் அல்லது உறவினர்களிடம், 'நான் பிறரிடம் உரையாடுவதில் ஏதாவது தவறு இருக்கிறதா? எந்த விடயத்தில் நான் என்னைத் திருத்திக்கொள்ள வேண்டும்?' என்று கேளுங்கள். பெரும்பாலும் உங்களை வியக்க வைக்கும் ஒரு பட்டியலே பதிலாகக் கிடைக்கும்! அவற்றைக் குறைத்துக்கொள்ளுங்கள். விஷம் பரவ நாம் காரணமாக இருக்க வேண்டாம்.



# வாழை இலையில் சாப்பிட்டால்

சூடான உணவுகளை வாழை இலையில் பரிமாறும்போது, ஒருவித வாசனை தோன்றும். அந்த வாசனைக்கு நம்முடைய பசியைத் தூண்டும் சக்தி உண்டு. வாழை இலையில் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் தோல் பளபளப்பாகும். உடல் ஆரோக்கியம் பெருகும். மந்தம், வலிமைக்குறைவு, இளைப்பு போன்ற பாதிப்புகள் நீங்கும். 'அழல்' எனப்படும் பித்தம் தணியும். மேலும் வாழை இலையில் சாப்பிடுவதால், இளநரை தோன்றாது. நம் கேசம் நீண்ட நாள்களுக்குக் கருமை மாறாமல் இருக்கும்.

வாழை இலையில் முதலில் இனிப்பு பரிமாற வேண்டும். தொடர்ந்து புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கசப்பு ஆகிய முறைப்படி பரிமாற வேண்டும். இந்த அறுசுவைகளும் என்னென்ன பலன்களைத் தரும் தெரியுமா?

**இனிப்பு**
தசையை வலுப்படுத்தும்

**புளிப்பு**
நல்ல கொழுப்பை வழங்கும்

**கார்ப்பு**
எலும்புகளை வலுவாக்கும்

**உவர்ப்பு**
உமிழ்நீரைச் சுரக்கச் செய்யும்

**துவர்ப்பு**
இரத்தத்தைப் பெருக்கும்

**கசப்பு**
நரம்புகளை வலுப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




வாணங்கள் வெடித்தன. ஆகாயத்தைக் கீறிக் கொண்டு கிளம்பிப் பூப் பூவாகச் சிந்தின. திடீரென சீமை வாணமொன்று வழிதவறி அலங்காரப்பந்தரின் வாணக்குவியலுட் புகுந்தது. பீரங்கியென வெடித்தது. அருகில் நின்ற சிலர் பலியாகினர். எங்கும் கூச்சல்.

மக்கள் திக்குத்திசை தெரியாது பாய்ந்தோடினார்கள். கூச்சல், கூக்குரல் முற்றவெளியெங்கும் நிறைந்தது. பொலிஸ் அதிகாரி றட் துரைக்கு அருகில் நின்றிருந்த சார்ஜன் சுப்பையா மகனும் கடுங்காயமுற்று விழுந்தார். அரசாங்க ஏசண்டர் துவைனமும் பொலிஸ் அதிகாரி ரட்டும் வேகமாகப் பாதுகாப்புத் தேடி ஓடிப் போய் திரும்பி வந்த போது நூற்றுக்கணக்கானோர் காயம் அடைந்திருந்தனர். அவர்கள் உடனடியாக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

*1897 ஆம் ஆண்டு அதேயிடத்தில் விக்டோரியா மகாராணியின் அறுபதாவது ஆட்சி நிறைவு (வச்சிரயூபிலி) கொண்டாடப்பட்டது. ஆனால் அவ்வேளை வடமாகாண அரசாங்க ஏசண்டராகவிருந்த ஹோரிஸ் பறோ வாணவேடிக்கைக்கு அனுமதியளிக்க வில்லை.*

*1940 ஆம் ஆண்டு வரை கோட்டையின் அரண்சுவர்களில் பொருத்தப்பட்டிருந்த பீரங்கிகள் நீக்கப்படாதிருந்தன. பின்னர் அவை அவ்விடங்களிலிருந்து அகற்றப்பட்டன. அகற்றப்பட்ட பீரங்கிகளும், பீரங்கிக் குண்டுகளும் காலகதியில் உருக்கப்பட்டன.*

*04 பெப்ரவரி 1948 இல் ஆங்கிலேயரின் கொடி இலங்கை எங்கும் இறக்கப்பட்டது. அவ்விடத்தில் ஸ்ரீலங்காவின் ஆதிக்கக் கொடி உயர்த்தப்பட்டது. தெளிவாகப் பிரிந்திருந்த தமிழரசையும், சிங்கள அரசையும் ஒன்றாகி பேரினவாதிகளின் கைகளில் தூக்கி வழங்கிவிட்டு ஆங்கிலேயர் விருப்பின்றி விலகிச் சென்றனர்.*

*ஈழ யுத்தம்-01*

*இலங்கையைச் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திய ஆங்கிலேயர், சிங்களப் பேரினவாதிகளிடம் கையளித்துவிட்டு அகன்றனர்.*

*அன்றிலிருந்து தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகள் அவிழ்த்துவிடப்பட்டன. 1948 ஆம் ஆண்டில் இந்திய வம்சாவழித் தமிழரின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. 1949 இல் அகில இலங்கைக் காங்கிரசிலிருந்து விலகிய, எஸ் ஜே. வி செல்வநாயகம் சமஷ்டிக் கட்சியைத் தொடக்கினார். 1951 இல் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகிய எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஆட்சியைக் கைப்பற்றும் நோக்குடன் ஆரம்பித்தார்.*

(தொடரும்...)

---

# கடல் புறா

## எட்டாக் கனியும் கிட்டாக் கனியும்




காலத்தின் பதிவு 132

பலவர்மன் எதற்கு குத்துவான்? அவனுக்கு இஷ்டமில்லாத பணியைச் செய்வதற்காக பொக்கிஷத்தை கையாள்கிறானே அதற்காகவா? அதற்கு மட்டுமல்ல. அவன் பொக்கிஷத்தையும் நமது பொக் கிஷத்தையும் ஒன்று சேர்த்து விட்டாய். "ஐயோ! அப்படிச் செய்ய நீங்கள்தானே உத்தரவிட்டீர்கள்?"

தவிர இரண்டையும் உண்மையாக நீ கலக்கவில்லை. கலப்பது போல் பாசாங்கு செய்தாய். அது உங்கள் உத்தரவுதானே? செலவுக்கு நமது பொக்கிஷப் பணத்தை எடுக்காமல் அவன் பொருளாகப் பார்த்து விரயம் செய்கிறாய்.

என்ன அநியாயம்! இதுவும் நீங்கள் இட்ட உத்தரவு தானே! இப்படியே போனால் பலவர்மன் ஓட்டாண்டியாகி விடுவான். ஐயையோ! ஆக்கச் சொன்னது நீங்கள்தானே? எல்லாப் பழியையும் என்மேல் போடுகி றீர்களே!

இந்தச் சம்பாஷணை ஒரு பக்கம் உக்கிரமாகவும் குற்றச்சாட்டாகவும் இன்னொரு பக்கம் கெஞ்சலாகவும் பயத்துடனும் நடந்தது. இடையிடையே இளையபல்லவன் குடித்தான். நகைத்தான். குற்றம் சாட்டினான். கூலவாணிகனோ கெஞ்சினான். அஞ்சினான். அந்தக் கெஞ்சலையும், அவன் அச்சத்தையும் சிறிதும் லட்சியம் செய்யாத இளையபல்லவன் குற்றச்சாட்டுகளை அடுக்கிவிட்டு, கூலவாணிகனின் பரிதாப நிலையைப் பார்த்தும் மனமிளகாதவனாய், சேந்தா! அறையின் கதவுகளைத் தாழிடு என்று கடைசியாக உத்தரவொன்றையும் பிறப்பித்தான். உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தோரணை மறுப்புக்கு இடங் கொடாததாயிருக்கவே வேறு வழியின்றிக் தவுகளைத் தாழிட்ட சேந்தன் அடுத்துக் கிடைத்த உத்தரவைக் கேட்டுச் சிறிது கலங்கவும் செய்தான்.எதிரேயிருந்த மஞ்சத்தில் உட் காரப் போனவனைக் கையைக் காட்டித் தடுத்த படைத்தலைவன், இப்படி வா! உட்கார் என் பக்கத்தில், மஞ்சத்தை விடப் பஞ்சணை சிறந்தது என்றான்.

குடிபோதை படைத் தலைவனுக்கு நன்றாக ஏறிவிட்டதைப் புரிந்துகொண்ட சேந்தன் சிறிது தயங்கினான். தயக்கத்தைக் கண்ட இளையபல்லவன் வா இப்படி! மஞ்சளழகிகூட இல்லை அவளுக்குப் பதில் நீ உட்கார். என்று இரைந்து கூறி கட்டடம் அதிரும் படியாக நகைக்கத் தொடங்கினான். அந்த நகைப்பைக் கேட்டுக் கதிகலங்கிய கூலவாணிகன் சேந்தன் வேறு வழியின்றிப் பஞ்சணையின் முகப்பில் மெள்ள உட்கார்ந்து அச்சம் மிகுந்த பார்வையொன்றை இளையபல்லவன் மீது வீசினான்.

அப்படி அவன் உட்கார்ந்தபிறகு இளையபல்லவனின் அட்டகாசம் சிறிது அடங்கியது. நீண்ட நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்த இளையபல்லவன் அநாவசியமாக மீண்டும் ஒருமுறை நகைத்தான். பிறகு ரகசியமாகத் தானே ஏதோ வார்த்தைகளைப் பேசிக் கொண்டான். பிறகு அறைக் கதவைத் திறந்து கொண்டு சென்று அங்கிருந்த காவலரை விரட்டி அவர்களில் ஒருவனை மாடிப்படியில் உருட்டி யும் விட்டான். பிறகு மீண்டும் அறைக்குள் வந்து கதவைத் தாழிட்டு விட்டுப் பஞ்சணையில் அமர்ந்தான்.

இளையபல்லவன் சேஷ்டைகள் எதுவுமே புதிதாயில்லை கூலவாணிகன் சேந்தனுக்கு. இத்தகைய ஆர்ப்பாட்டமும் கூத்தும் மாளிகை மாடியில் தினசரி நிகழ்ச்சிகளாகிவிட்டதை அவன் உணர்ந்தேயிருந்தான். ஆகவே அது எதுவுமே சேந்தனுக்கு வியப்புமில்லையென்றாலும் கதவு தாழிட்டதும் தொடர்ந்த இளையபல்லவன் பேச்சு பெரும் பிரமிப்பை அளிக்கவே செய்தது அவனுக்கு. தலையைக் குனிந்துகொண்டு பஞ்சணையில் உட்கார்ந்திருந்தசேந்தனை, "சேந்தா!" என்ற இன்சொல் திடீரெனத் தலை திமிர வைத்தது. அந்தச் சொல்லை விடுத்த இளையபல்லவன் குரலில் தொனித்த ஒலியும் பெருவியப்பை விளைவித்தது சேந்தனுக்கு. சற்று முன் இருந்த வெறி ஒலி இல்லை அந்தக் குரலில் அன்பு ஒலிதானிருந்தது. ஓரளவு நிதானங்கூட இருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவனும் மனித சாதி

ஆண்டவன் அவனியிலே
மனித சாதி இரண்டு வைத்தான்
மனிதனோ தன் படைப்பில்
பல சாதி முன் வைத்தான்
மதங்கள் எல்லாம் அன்பென்று
ஆண்டவன் அறிவித்தான்
மனிதனோ அதைப் பிரித்து
அவலத்தை தோற்றுவித்தான்
நீதிகள் படைத்திருந்தான்
காப்பாற்றத் தெரியவில்லை
எனக்குத்தான் சொந்தம்
என்றான் பலம் படைத்தவன்
சாதிகள் படைத்து
அதை பாசிகள் படர விட்டாய்
யோசி! யோசி!! யோசி!!!
அவனும் மனித சாதி



துணவியூர் நடா.

## மதுவை விட்டுவிடு!

மதுவின் போதையில் தினம் தோறும்
மயங்கும் மன்னவனே....
உன் மாதுவின்.....
ஆசையை கேளாயோ....
ஒரு முறையேனும்.....
நீ தினமும் காலி செய்யும்
கோப்பை தான்....
உன்னை ஒரு நாள் காலி செய்யும்.....
குடித்த சில நொடியில்....
மதி இழக்கும் மன்னவனே.....
மனையாளின்...தேவை....
மறவாதே ஒரு போதும்....
அல்லும் பகல் நீ குடிக்க...
அல்லல் படும் உன் குடும்பம்....
பிள்ளை செல்வம் காணாது....
பொருள் செல்வம் அழிப்பாயோ?
கொண்ட இன்பம் தொலைத்து விட்டு....
கண்ட இன்பத்தில் திளைப்பாயோ?
மழலை மொழி கேளாது ....
மதுவில் உன்னை தொலைத்து விட்டு.....
மனையின் நலன் கெடுக்கும் இந்த....
மதுவை நீயும் விட்டு விட்டால்...
உன்னை ஒரு போதும் விட மாட்டாள்....
உன் தர்ம பத்தினி நடு தெருவில்....
சீர் கெட்டு நீயும் போனால்... ஊர் கொட்டும் .....
உன் தலையில்.... தலைவனாய்....நீ மாறி.....
சீர் தூக்கு.... அடுத்த தலைமுறையை....
காலம் இன்னும் காத்திருக்கு.... நீ மனம் மாறு
உனக்காக குடும்பம் இருக்கு....

தினேஷ் நிலா

## பதின்ம வயதில்

ஒரு நொடிக்குள்
யுகத்தை அடைத்து வைக்கும்
கடும் நெரிசல்
மிகுந்த இந்தப் பதின்மத்தைக்
கடப்பதொன்றும் அவ்வளவு கடினமல்ல

தவிர்ப்புக்குரியவைகள் மீதே
ஈர்ப்புகொள்ளும்
தவிர்க்க முடியாததொரு காலமிது..

மனமும் பயிற்சியும்
முதிர்ச்சி அடையும் காலம்வரை
அன்பும் ஆதரவும் நிறைவாக
கொடுப்பதே போதுமானது..

தடுக்கும் அறிவையும்
ஒதுக்கி வைத்துவிட்டு
காலத்தை காலி செய்யும்
வேகத்தில் உருளும் சக்கரங்களுக்கு
அன்பு ஒன்றே வேகத்தடையாக்கி
உடனிருங்கள் போதும்..

அன்பு ஒன்றே ஆதி ஒளி
சுடர்விடும் வாழ்வு
அவ்வளவுதான்
காலத்தின் முன்,
எதையும் கடந்துவிடலாம்
கடினமல்ல...

சாங்கரி சிவகணேசன்

## மௌனத்தின் தேடல்-740



### ஆயுத எழுத்து

ஆயுத எழுத்துகள்
ஒருநாளும் ஆக்கத்தைத்
தராது என்ற
அறியா உண்மையை
உணராமல் முள்வேலியிட்டு
முதுகு காட்டி எல்லைபோட்டு
எல்லை மறைத்து
எதுவும் செய்யலாம் என
எண்ணினால்...
ஆயுத எழுத்துகள்
காகிதமாகிவிடும்...

உதிஸ்ரன், தெல்லிப்பளை.

### ஊருக்குப் போகலாமோ?

பாதை திறந்தாச்சாம்
உன் வீடு, காணியை
போய்ப்பார்
என்றார்- அப்பா
என் வீடு காணிக்குள்
நான் போக உரிமையில்லை.

சாந்தையூரிவன்.

### காணி நிலம் வேண்டும்

பலம்மிக்க கலங்கள்
மலமிழந்த மக்களின்
முதுகுகளில் மிதித்து
முன்னேறின...
பாழாய்ப்போனது- எம் நிலம்
முப்பாட்டன் வாழ்ந்த நிலம்
முப்படைகள் ஆட்சியில்
எப்படி விடிவு வரும்?
தப்பெனின் தட்டிக்கேட்கும்
கோமகனே தவறு செய்தால்...?
காணி நிலம் வேண்டும்- எமக்கு
எம் காணி நிலம் வேண்டும்!

இந்திரபுத்திரன்

### சுமைதாங்கி

சுட்டு விரல் நீண்டு
சுடும் துப்பாக்கி போன்றானது
வேலியே பயிரை மேய்ந்ததால்
வாழ்விடத்தை விட்டுத் தூரமாக்கி
அலைய விட்ட கொடுமையை
வரிசையாய் அடுக்கியதால் வலித்தது
இது வலி வடக்கில் மட்டுமன்றி
விரைந்து வட கிழக்கிலும் பரந்தது
சோகங்களை உள் வாங்கியதால்
தோளில் தொங்கிய துப்பாக்கி
தொழில் முறையைக் கைவிட்டு
தோழமையுடன் சுமை தாங்கியானது

க.நாகராசா, நுணாவில்

## மௌனத்தின் தேடல்- 741



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

### "சொந்த மண்ணில் கால்பதிப்போம்"

எமது தந்தையர்,பாட்டன்
உரிமைச் சொத்து எங்கள் காணிகள்
இன்று முட்கம்பிகளால் அடைக்கப்பட்டு
கால்பதிக்க முடியாத நிலை
ஏனிந்த வேதனை
இன்று திறந்துவிடப்பட்ட
பகுதிகளில் நம்மவர் கால் பதிக்கும்
போது எத்தனை ஏக்கம்- எத்தனை
பூரிப்பு ஐயா! பெரியவரே
நீங்கள் நியாயம் கேட்டு நிற்பது
நமக்கு புரிகின்றது
காலம் பதில் சொல்லட்டும்

அபி குலமாலிகா, சித்தன்கேணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்: ஆடிப்பெருக்கு
இயற்றியவர்: கண்ணதாசன்
பாடியவர்: பி. சுசீலா
இசை: ஏ.எம். ராஜா



காவேரி ஓரம் கவி சொன்ன காதல்
கதை சொல்லி நான் பாடவா – உள்ளம்
அலைமோதும் நிலை கூறவா? – இந்தக்
கனிவான பாடல் முடிவாகு முன்னே
கனவான கதை கூறவா – பொங்கும்
விழி நீரை அணை சேர்க்கவா
காவேரி ஓரம் கவி சொன்ன காதல்
கதை சொல்லி நான் பாடவா – உள்ளம்
அலைமோதும் நிலை கூறவா?

பொருளோடு வாழ்வு உருவாகும் போது
புகழ் பாடப் பலர் கூடுவார் – அந்தப்
புகழ் போதையாலே எளியோரின் வாழ்வை
மதியாமல் உரையாடுவார் – ஏழை
விதியோடு விளையாடுவார் – அன்பை
மலிவாக எடை போடுவார் – இந்தக்
கனிவான பாடல் முடிவாகு முன்னே
கனவான கதை கூறவா – பொங்கும்
விழி நீரை அணை போடவா?

காவேரி ஓரம் கவி சொன்ன காதல்
கதை சொல்லி நான் பாடவா – உள்ளம்
அலைமோதும் நிலை கூறவா?

அழியாது காதல் நிலையானதென்று
அழகான கவிபாடுவார் – வாழ்வில்
வளமான மங்கை பொருளோடு வந்தால்
மனம் மாறி உறவாடுவார்
கொஞ்சு?ம் மொழி பேசி வலைவீசுவார் – தன்னை
எளிதாக விலை பேசுவார் – இந்தக்
கனிவான பாடல் முடிவாகு முன்னே
கனவான கதை கூறவா – பொங்கும்
விழி நீரை அணை போடவா?

காவேரி ஓரம் கவி சொன்ன காதல்
கதை சொல்லி நான் பாடவா – உள்ளம்
அலைமோதும் நிலை கூறவா?

# உச்சியில் வைத்துக் கொண்டாடப்பட்டவரின் வீழ்ச்சி

“திறமை என்பதை பந்தை சிறப்பாக அடித்து ஆடும் விதத்தை வைத்து மட்டுமே அளவிட முடியாது. திறமை என்பது பல கூறுகள் ஒன்றிணைந்து கிடைக்கப் பெறும் ஒரு விடயம். ஒழுங்கு, மனத்திடம், தொடர்ச்சி எனப் பலவற்றையும் கணக்கில் கொண்டுதான் ஒருவரின் திறமையை அளவிட முடியும்”

‘மீண்டெழும் கதைகள்தான் விளையாட்டின் ஆகச்சிறந்த ஆதாரம். பிரித்வி ஷாவைச் சுற்றி நல்ல மனிதர்கள் இருப்பார்களாயின் அவர்கள் அவருக்கு அறிவுரை சொல்ல வேண்டும். சோஷியல் மீடியாவிலிருந்து வெளியேறி கடினமாக உழைத்து மீண்டும் அவரை உடற்தகுதியை எட்டச் சொல்ல வேண்டும். அது மட்டுமே அவரை சரியான பாதைக்குத் திருப்பி, மீண்டும் அவருக்கு வெற்றிகளைப் பெற்றுத்தரும். அவர் அதீத திறமைசாலி. அவரை அவ்வளவு எளிதில் தூக்கி எறிந்துவிடக்கூடாது என இந்திய இளம் கிரிக்கெட் வீரர் பிரித்வி ஷாவுக்காக இங்கிலாந்திலிருந்து குரல் எழுப்பியிருக்கிறார் கெவின் பீட்டர்சன்.

யாஷஸ்வி ஜெய்ஸ்வால், கில், சிராஜ் என இந்திய கிரிக்கெட்டில் இப்போது ஒரு புதிய தலைமுறை நுழைந்திருக்கிறது. இனி அவர்கள்தான் இந்திய கிரிக்கெட்டில் கோலோச்சப் போகிறார்கள் எனப் பலரும் ஆருடம் சொல்லிவருகின்றனர். இந்தப் பட்டியலில் பிரித்வி ஷாவின் பெயரும் இருந்திருக்க வேண்டும். ஏனெனில், ஜெய்ஸ்வாலுக்கும் கில்லுக்கும் முன்பாகவே இந்திய அணியின் அறிமுகத் தொப்பியை வாங்கியவர் அவர்.

அண்டர் 19 கிரிக்கெட்டிலும் உள்ளூர் போட்டிகளிலும் அசத்திய பிரித்விக்கு வெகு இளம் வயதிலேயே இந்திய அணியின் வாயிற்கதவுகள் திறந்தன. இந்திய அணியிலும் அவரின் வரவை பாரபட்சமில்லாமல் எல்லாத் தரப்பினரும் கொண்டாடித் தீர்த்தனர். கவாஸ்கர், சச்சின், அசாருதீன் என்றெல்லாம் கொண்டாடப்பட்டார். பிரித்விஷாவும் அதற்கேற்ற வகையில் பெர்ஃபாம் செய்தார். தனது முதல் டெஸ்ட்டிலேயே ஆகச் சிறப்பாக ஒரு சதத்தை அடித்தார். இந்திய கிரிக்கெட்டின் வருங்காலமே பிரித்விதான் என கிரிக்கெட் உலகமே உச்சிமுகர்ந்து பாராட்டியது. ஆனால் வெகு சீக்கி ரமே அவரின் கரியர் பெரும் சறுக்கலை எதிர் கொண்டது.

‘திறமை என்பதை பந்தைச்சிறப்பாக அடித்து ஆடும் விதத்தை வைத்து மட்டுமே அளவிட முடியாது. திறமை என்பது பல கூறுகள் ஒன்றிணைந்து கிடைக்கப் பெறும் ஒரு விடயம். ஒழுங்கு, மனத்திடம், தொடர்ச்சி எனப் பலவற்றையும் கணக்கில் கொண்டு தான் ஒருவரின் திறமையை அளவிட முடியும்” என ராகுல் ட்ராவிட் சொல் லியிருக்கிறார்.

இது எல்லாத் துறைகளுக்கும் பொருந்திப்போகும். நம் அலுவலகச் சூழல்களிலேயே கூட அதீத திறமை வாய்ந்தவர்கள் பல பேர் இருப்பார்கள். ஆனால் அவர்களிடம் தொடர்ச்சி, ஒழுங்கு போன்றவை இருக்காது. அதேசமயம் அவர்களைவிட திறன் குறைந்தவர்கள் நேரம் தவறாமை, அலுவலக விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது உள்ளிட்டவற்றில் அவர்களைவிட சரியாக இருந்து சீராகச் செயற்பட்டு, தடங்கலின்றி தங்களின் உயரங்களை எட்டுவதைப் பார்த்திருப்போம். இந்த விடயத்தோடுதான் பிரித்வியின் கரியரையும் ஒப்பிட வேண்டும்.

பிரித்வி அதீத திறமைசாலியாக இருந்தாலும் அவருடைய நடவடிக்கைகளில் ஒழுங்கு இருக்கவில்லை. முறையாகப் பயிற்சிகளில் பங்குகொள்ளாமல் இருந்தது, சக வீரர்களுடனும் பயிற்சியாளர்களுடனும் சுமுகமான உறவைப் பேணாமல் இருந்தது, பொது இடங்களில் முகஞ்சுளிக்கும் வகையிலான சண்டைகளில் ஈடுபட்டது எனப் பலவற்றிலும் அவர் இடறினார். விளையாடத் தகுதிபெற வேண்டிய ஃபிட்னெஸையும் அவர் இழந்தார். இந்தக் காரணங்களால் தான் உச்சத்தில் கொடிகட்டிப்பறக்க வேண்டிய பிரித்திவி, ஐ.பி.எல் ஏலத்தில் எந்த அணியாலும் வாங்கப்படாமல் அன்சோல்டு (Unsold) ஆனார்.

டிராவிட் சொன்னதைப் போல எவ்வளவு திறமை இருந்தாலும், பல கூறுகளையும் பின்பற்றி ஒழுங்கோடு இருந்தால் மட்டுமே எந்தத் துறையிலும் வெல்ல முடியும்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

428

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## கழுதை அறியுமா கற்பூரவாசனை

வைத்தியரைச் சந்திக்கும் பொழுது, பொதி செய்யப்பட்டுவரும் சில மா வகைகளைக் குறிப்பிட்டு இதனைச் சாப்பிடலாமா? அதனைச் சாப்பிடலாமா? என்று கேட்காதவர்கள் யாருமில்லை என்ற நிலை தோன்றியிருக்கிறது. விலை உயர்ந்த, அந்த விலைக்குப் பெறுமதி இல்லாத இந்த உணவு வகைகள் எங்கிருந்து படையெடுத்து வந்து எம்மை இப்படி ஆக்கிரமித்துக்கொண்டன? விளம்பரங்களும் கண்களைப் பறிக்கும் விதத்தில் பொதி செய்யப்பட்டிருக்கும் அந்த அழகும் அவற்றின் நறுமணங்களும் எம்மை இலகுவில் ஏமாற்றி அடிமைப்படுத்தி விடுகின்றன.

இயற்கையான போசாக்கு மிக்க மலிவான உணவுப் பொருட்கள் எத்தனையோ இருந்தும் பகட்டாக இறக்குமதி செய்யப்பட்டுவரும் உணவுப்பொருட்களிற்கு அடிமைப்பட்டுப்போய் இருக்கிறோம். அவை தான் உண்மையான சத்துள்ள உணவுகள் என்று எண்ணிக்கொள்கிறோம்.


1800 ரூபாவிற்கு ஒரு மாப் பேணியை வாங்கி உண்ணும் பொழுது 500 ரூபா எம்மில் செறிகிறது. மிகுதி 1300 ரூபாவும் நாம் செலுத்தும் கப்பம். இந்த 1800 ரூபாவிற்கு உழுத்தம் மாவோ, பயற்றம் மாவோ அல்லது முட்டை மாவோ செய்து சாப்பிடு வோமாயின் அந்த 1800 ரூபாவும் எம்மில் செறியும்.

ஒரு பொருளைப் பேணியிலோ அல்லது போத்தலிலோ பொதிசெய்ய முன்பு அது பலவிதமான வெப்ப நிலை மாற்றங்களுக்கும் உலர்த்துதல்களுக்கும் உட்படுத்தப்படுகின்றது. இதன் போது அதன் இயற்கையான மூலக்கூறுகளில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்படுகின்றன.

அத்துடன் இவை பழுதுபடாமல் இருப்பதற்காக இவற்றிற்குப் பல்வேறுபட்ட இரசாயனப் பதார்த்தங்கள் சேர்க்கப்படுகின்றன. அத்துடன் நறுமணத்திற்காகவும் சுவைக்காகவும் மற்றும் சில பொருட்களும் சேர்க்கப்படுகின்றன. இவ்வாறு பொதி செய்யப்பட்டுவரும் இந்தக் கலவைகளின் காலடியில் தான் நாம் வீழ்ந்து கிடக்கிறோம்.

மேலைத்தேச நாடுகளில், இயற்கையான பொருட்களிற்கு மதிப்பு அதிகம். அவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொள்வது கடினமாக இருந்தும் அதிக விலை கொடுத்து இயற்கையான உணவுகளை வாங்க எத்தனை முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் எம்மைச் சுற்றி மலிவான இயற்கையான பொருட்கள் எவ்வளவு இருந்தும் அதிக விலை கொடுத்து பொதி செய்யப்பட்ட பொருட்களை வாங்க ஆசைப்படுகின்றோம். "கழுதை அறியுமா கற்பூர வாசனை" என்ற பழமொழி ஞாபகம் வருகின்றது.

குளிர்பான வகைகளும் சோடா வகைகளும் வந்து, எமது பாரம்பரிய தேசிக்காய்த்தண்ணீர், இளநீர்,



குத்தரிசிக்கஞ்சி, மோர் போன்றவற்றினை அடித்துத் துரத்தி ஏளனத்துக்குரியவையாக்கிவிட்டன.

முருங்கை இலை, வாழைப் பொத்தி, அகத்தி இலை, அகத்திப்பூ, சிறகவரை, சண்டி இலை, தூதுவளை போன்றவை மருந்துகள் படாத இயற்கையான ஊட்டச்சத்துள்ள மரக்கறி வகைகள்.

இவற்றையெல்லாம் நாம் வெறுத்து ஒதுக்கிவிட்ட காரணம் என்ன?முட்டை மிகவும் பாதுகாப்பான, ஒப்பீட்டளவில் மலிவான, அதி உச்ச புரதச்சத்துள்ள உண வாகும். இதனை ஆபத்தான உணவு என்று மனதில் வகைப் படுத்தி வைத்திருக்கிறோம்.

இயற்கையான உணவு வகைகளின் மகத்துவத்தை நாம் உணர்ந்து கொள்வோம். மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவோம். இதன் மூலம் நாம் அநாவசியமான பணச்செலவுகளைக் குறைப்பதுடன் உடல் ஆரோக்கியத் தையும் பேணி, நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வோம்.

**Dr.சி.சிவன்சுதன்,**
**பொது வைத்திய நிபுணர்,**
**யாழ் போதனா**
**வைத்தியசாலை.**

---

## வேக நடை

ஆரோக்கியமான ஒவ்வொருவரும் 30 நிமிடங்கள் வேக நடையை உடற் பயிற்சியாகச் செய்து வருவார்களாயின் அவர்கள் பல தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவர்.

வேகநடை என்பது பொதுவாக 5 கிலோ மீற்றர் / மணி என்ற வேகத்தில் நடப்பது என்று பொதுவாக வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. 30 நிமிடங்கள் 5 கிலோ மீற்றர்/ மணி என்ற வேகத்தில் நடப்போமாயின் எம்மால் 2.5 கிலோமீற்றர் தூரம் நடக்க முடியும்.

சராசரியாக நிமிடத்திற்கு 110 அடிகள் எடுத்துவைப்போமாக இருந்தால் மேற்குறிப்பிட்ட வேகத்தை எம்மால்பேண முடியும். நேரம் போதாமல் இருக்குமாயின் இதனை 15 , 15 நிமிடங்களாகவும் பிரித்துக்கொள்ளலாம். இந்த வேகநடையை அமைதியான இயற்கையான சூழலில் செய்வோமாயின் அது மன அமைதிக்கும் உறுதுணையாக அமையும்.


**Dr.சி.சிவன்சுதன்,**
**பொது வைத்திய நிபுணர்,**
**யாழ் போதனா வைத்தியசாலை.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமபிதா காட்டிய பாதை

## சுமையா? சுதந்திரமா?



திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறின் பைபிள் பகுதி லூக்கா: 03:10-18 இல் இருந்து தரப்படுகின்றது. இப்பகுதியில் திருமுழுக்கு யோவானின் இறையாட்சிக் கனவைக்காட்டுகிறது.

மனந்திரும்புதல், நீதியான வாழ்க்கை, கடவுளின் அரசு நெருங்கியுள்ளது, இயேசு வருகிறார். ஆயத்தமாக இருங்கள் மற்றும் சந்திக்கத் தயாராகுங்கள் என்று மக்களைத் அவர் தயார்ப்படுத்தியதை பார்க்கிறோம். "அப்போது, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கூட்டத்தினர் அவரிடம் கேட்டனர். திருமுழுக்கு யோவான் மறுமொழி கூறுகின்றார்: "இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும். உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்." "உங்களுக்கு குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்," என்று வரி தண்டுவோருக்கு கூறினார். "நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள். யார்மீதும் பொய்க் குற்றம் சுமத்தாதீர்கள். உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள்". என்று படைவீரருக்கு கூறினார்.

"நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்ற அவசரக் கேள்வியுடன் மக்கள் திருமுழுக்கு யோவானை அணுகினர். இது ஓர் உலகளாவிய மனித அக்கறையை பிரதிபலிக்கிறது: தெய்வீக சத்தியத்தின் வெளிச்சத்தில் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு அவர் பதில், வெறும் உணர்ச்சியை மட்டும் அல்லாமல் செயலை வலியுறுத்துகிறது. உண்மையான மனமாற்றம் மேலேழுந்த மாதிரியான துக்கம் அல்ல, மாறாக உறுதியான மனமாற்றம்: தேவையிலிருப்பவருடன் வளங்களைப் பகிர்ந்துகொள்வது, நேர்மையைக் கடைப்பிடிப்பது, மற்றும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிபது ஆகியவை மனந்திரும்பும் இதயத்தின் பலன்கள்.

மனந்திரும்புதல் என்பது செயல்களை விட வார்த்தைகளைப் பற்றியது என்றுதான் நாம் எத்தனை முறை நினைக்கிறோம். அவரது செய்தி நுனிப்புல்மேகின்ற மதவாதத்தைச் சவால் செய்கிறது. நமது அன்றாட வாழ்க்கை, நமது தெரிவுகள், முன்னுரிமைகள் மற்றும் இடைத் தொடர்புகள் உண்மையான மாற்றத்தை பிரதிபலிக்கிறதா?

அவரின் அறிவுறுத்தல்கள் வியக்கத்தக்க நடைமுறை மற்றும் சமூக உணர்வுடன் உள்ள ஒரு சமூக மாற்றமான நற்செய்தியாகின்றது வரி தண்டுபவர்களிடம், அவர் நியாயத்தைக் கோருகிறார். படைவீரர்களிடம் அவர் ஒருமைப்பாடு மற்றும் மனநிறைவை கட்டிஎழுப்ப முனைகின்றார்.

இந்தக் குழுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி, அதை அடிக்கடி தவறாகப் பயன்படுத்தி, மற்றவர்களைச் சுரண்டுகின்றன. அவர்களின் குறிப்பிட்ட சூழல்களை எடுத்துரைப்பதன் மூலம், மனந்திரும்புதல் வெறுமனே பொதுவானது அல்ல என்பதை காட்டுகிறார்.

அது நம்முடைய தனிப்பட்ட பொறுப்புகள் மற்றும் தோல்விகளில் நம்மை சந்திக்கிறது.

எங்கள் தொழில்களைப் பற்றி இன்று பேசினால், அவர் என்ன சொல்ல முடியுமாக இருந்திருக்கும்? வணிகத் தலைவர்களிடம், அவர் ஊதியத்தில் நியாயத்தைக் கோருவாரா? கொள்கை வகுப்பாளர்களிடம், அவர் ஆட்சியில் நியாயம் கேட்பாரா? நமது செயற்பாடுகள் மற்றவர்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதற்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்பேற்க வேண்டும்.

திருமுழுக்கு யோவான் தன்னைவிடப் பெரியவர் வரப்போகிறார், அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்கு திருமுழுக்குக் கொடுப்பார். கோதுமையையும் பதரையும் பிரித்தெடுப்பார் என்று வரவிருக்கும் தீர்ப்பின் எச்சரிக்கையை அறிவிக்கிறார்.

கடவுளின் நீதி ஏதேச்சதிகாரமானதல்ல, ஆனால் நன்னெறியில் வேரூன்றியுள்ளது என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது.

மனந்திரும்புதல் கடவுளுக்கு முன்பாக நிற்க நம்மை தயார்படுத்துகிறது, ஆனால் இந்த அழைப்பைப் புறக்கணிப்பது அவரிடமிருந்து பிரிந்து செல்வதற்கு வழிவகுக்கிறது.

நாம் எமது செயற்பாடுகள் நித்திய விளைவுகளைக் கொண்டிருக்கின்றன என்று இன்று விழிப்புணர்வோடு வாழ்கிறோமா? கருணை மற்றும் தீர்ப்பு இரண்டின் வாக்குறுதிகள் எவ்வாறு நமது முன்னுரிமைகள் மற்றும் மதிப்புகளை வடிவமைக்கின்றன?

அவரின் செய்தி கருத்தூன்றி கவனிக்க செய்கிறதாயினும், அது நம்பிக்கைக்குரியதாகவும் இருக்கிறது. மெசியாவின் வருகை நீதியை மட்டுமல்ல, மாற்றத்தையும் கொண்டு வருகிறது.

கிறிஸ்து மூலம், நாம் தூய ஆவியைப் பெறுகிறோம். நாம் நியாயமாக வாழ்வதற்கு நம்முடைய சொந்த பலத்தை நம்பியிருக்கிறோமா அல்லது தூய ஆவியின் வல்லமையை நாம் ஈர்கின்றோமா? மனந்திரும்புதலை ஒரு சுமையாகப் பார்க்கிறோமா அல்லது கிறிஸ்துவில் சுதந்திரம் மற்றும் புதுப்பித்தலுக்கான பாதையாகப் பார்க்கிறோமா?

ம.பிரான்சிஸ், கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

# புதிய தவணைக்கு முன்

## சீருடைத்துணி வழங்க பணிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளில் புதிய தவணை ஆரம்பிக்க முன்னர் மாணவர்களுக்கு பாடசாலை சீருடைகளை வழங்குமாறு பணிப்புரை விடுத்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

வலயக் கல்வி அலுவலகங்களூடாக பாடசாலைகளுக்கு சீருடைகள் அனுப்பப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்தார்.

அடுத்த வருடத்தில் 46,40,086 மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட வேண்டும்.

2025 ஆம் ஆண்டிற்கான பாடசாலை சீருடைகளுக்கான முழுத் தொகைத் துணியையும் அன்பளிப்பாக வழங்க சீன மக்கள் குடியரசு முன் வந்துள்ளது.

குறித்த சீருடை துணிகள் 3 தொகுதிகளாக இலங்கையை வந்தடையவுள்ளதுடன் முதல் மற்றும் இரண்டாம் கட்ட தொகுதிகள் ஏற்கனவே இலங்கையை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# 17, 18 ஆம் திகதிகளில்

## கூடவுள்ள பாராளுமன்றம்

(கொழும்பு)

பாராளுமன்றம் எதிர்வரும் 17 ஆம், 18ஆம் திகதிகளில் கூடவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாராளுமன்றத் தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடவுள்ளதுடன் முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்வது தொடர்பான குறைநிரப்பு தொகை மதிப்பீடு தொடர்பான விவாதம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணி முதல் 5.30 மணி வரை சர்வதேச இறையாண்மை பத்திரங்களை மறுசீரமைப்பது தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை தொடர்பான விவாதத்திற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2024 வீதி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கான குறைநிரப்புத் தொகை மதிப்பீடு தொடர்பான விவாதமும் அன்றைய தினம் இடம் பெறவுள்ளதுடன் குறித்த விவாதத்தை 18 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 750 | 500 | 800 | 550-600 |
| உருளைக்கிழங்கு | 240 | 300 | 250 | 240 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1000 | 1000-1300 |
| தக்காளி | 400 | 350 | 300 | 250-300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 240 | 150-200 |
| கோவா | 350 | 320 | 250 | 250 |
| கரட் | 200 | 250 | 250 | 250 |
| பூசணி | 140 | 150 | 200 | 150 |
| புடோல் | 300 | 350 | 300 | 250 |
| வாழைக்காய் | 150 | 80 | 100 | 80-100 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 150-300 |
| பெரிய வெங்காயம் | 250 | 280 | 250 | 300 |
| பாகற்காய் | 1500 | 1800 | 1000 | 2000 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 160 | 130 |
| பயற்றங்காய் | 800 | 600 | 700 | 1000-1300 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 300 |
| பீற்றூட் | 350 | 300 | 200 | 300 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 | 600-700 |
| முருங்கைக்காய் | -- | 650 | 1000 | -- |
| போஞ்சி | 600 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 700 | 400 | 350 | -- |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 150 | 150-200 |
| தேசிக்காய் | 600 | 400 | 500 | 450-550 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-170 |
| இராசவள்ளி | -- | 800 | 650 | 720 |
| வெங்காயப்பூ | -- | 500 | 500 | -- |
| முள்ளங்கி | 250 | 300 | 300 | 110 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 150 | 100 |
| வல்லாரை | 80 | 350 | 100 | 100 |
| ஈரப்பலா | 150 | 80 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன்-ரஷ்யா போர் விரைவில் முடிவுக்கு வரும்



## டொனால்ட் ட்ரம்ப் உறுதி

(வோஷிங்டன்)

**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றதும், தான் போரை விரும்பவில்லை, போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சிப்பேன் எனத் தெரிவித்தார். இதன்மூலம் உக்ரைன்- ரஷ்யா, இஸ்ரேல்- ஹமாஸ், இஸ்ரேல்- ஹிஸ்புல்லா இடையிலான போர் முடிவுக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.**

ஏனென்றால் ரஷ்யாவை எதிர்த்துப் போரிட உக்ரைனுக்கும், ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லாவை எதிர்த்து போரிட இஸ்ரேலுக்கும் அமெரிக்காதான் இராணுவ உதவி செய்து வருகிறது. போர் நிறுத்தம் ஏற்படவில்லையென்றால் டொனால்ட் ட்ரம்ப் கட்டாயமாக இராணுவ உதவியை குறைப்பார்.

கடந்த சில நாட்களுக்கு முன் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை டொனால்ட் ட்ர ம்ப் சந்தித்தார். பின்னர் சமூக வலைத்தளத்தில் "உக்ரைன்- ரஷ்யா இடையில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும். அதனைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்" என தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அமெரிக்க ஏவுகணைகளை ரஷ்யா மீது உக்ரைன் செலுத்துவது பைத்தியக்காரத்தனம் என டொனால்ட் ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக ட்ரம்ப் தெரிவிக்கையில் "உக்ரைன்- ரஷ்யா இடையிலான போரில் அமெரிக்க ஏவுகணைகளை ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் பயன்படுத்துவது என்பது பைத்தியக்காரத்தனம்.

ரஷ்யாவுக்குள் நூற்றுக் கணக்கான மைல்களுக்கு ஏவுகணைகளை அனுப்புவதற்கு உடன்படவில்லை, நாம் இதை ஏன் செய்து கொண்டிருக்கிறோம், நாம் போரை அதிகரித்து மோசமாக்கி கொண்டிருக்கிறோம், இதை அனுமதிக்கக் கூடாது, நான் உக்ரைனை கை விட மாட்டேன், உக்ரைன்- ரஷ்யா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட மிகவும் சிறந்த திட்டம் உள்ளது. ஆனால் அதை பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை என ட்ரம்ப் தெரிவித்தார். (நி-8)

# பேசும் குப்பைத்தொட்டி ஹொங்கொங்கில் அறிமுகம்



(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் பேசும் குப்பைத் தொட்டி ஒன்று அந்த நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த குப்பைத் தொட்டி அங்குமிங்கும் நகர்ந்து, மக்களிடம் "நான் குப்பையைச் சாப்பிட விரும்புகிறேன்" எனக் கூறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குப்பையை போட்டவுடன் "ஆ, என்ன சுவையாக இருக்கிறது" என குப்பைத் தொட்டி மகிழ்ச்சியுடன் பதிலளிப்பதாக குறிப்பிடப்படுகின்றது.

மக்கள் தங்கள் குப்பைகளை அப்புறப்படுத்த ஊக்குவிப்பதே இதன் முதன்மையான குறிக்கோளாக இருந்தாலும், இந்த குப்பைத் தொட்டி பலருக்கு பொழுது போக்குச் சின்னமாகவும் மாறியுள்ளது.

மேலும் இன்ஸ்டாகிராம் பயனர்கள் இதனை ஆக்க பூர்வமான முயற்சி என பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ஜோர்டான் முதியோர் இல்லத்தில் தீ விபத்து- 6 பேர் உயிரிழப்பு

## 55 பேர் மருத்துவமனையில்



(அம்மான்)

ஜோர்டானிலுள்ள முதியோர் இல்லமொன்றில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்நாட்டின் தலைநகரான அம்மானிலுள்ள தனியாருக்குச் சொந்தமான முதியோர் இல்லமொன்றிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.இதன்போது குறித்த முதியோர் இல்லத்தில் சுமார் 111 முதியவர்கள் வசித்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதியோர் இல்லத்தின் முதல் தளத்திலேயே திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும், இதில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 55 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் காயமடைந்தவர்களில் 5 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தீவிபத்துக்கான காரணம் இது வரை வெளிவராத நிலையில் இது குறித்த தீவிர விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-8)

# சுற்றுலாப் பயணிகளுக்கு பாடசாலை செல்லும் வாய்ப்பு

## எந்த நாட்டில் தெரியுமா?



(டோக்கியோ)

ஜப்பானுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு "ஒரு நாள் மாணவர்" என அழைக்கப்படும் ஒரு புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாடசாலையை விட்டு விலகி மீண்டும் பாடசாலை செல்ல விருப்பப்படுபவர்கள் ஒரு நாள் பள்ளியில் படிப்பதற்கான வாய்ப்பை ஜப்பானிய அரசு உருவாக்கியுள்ளது.

இந்தநிலையில் ஜப்பானின் சிபா ப்ரிபெக்சரில் உள்ள ஒரு பழைய பள்ளியில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

குறித்த பள்ளியில் மாணவராக ஒரு நாளைக்கழிக்கலாம் எனவும் இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு பகுதியாக கையெழுத்து, கட்டானா சண்டை, உடற்கல்வி மற்றும் பல கற்றல் நடவடிக்கைகள் போன்ற பல செயற்பாடுகளை அனுபவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.அத்தோடு பாடசாலை சீருடையில் பள்ளிக்கு வருகை தர வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதே இதன் நோக்கம் என்பதுடன் ஜப்பானில் உள்ள கலாசாரம் மற்றும் கல்வி முறைகளுக்கு வெளிநாட்டவர்களுக்கு அறிமுகப் படுத்துவதற்கும் இது முக்கியத்துவம் அளிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது எண்ணம், சொல், செயல் மூன்றும் சமமாய் இருக்கும் போதே நமது நேர்மையை மற்றவர் உணர்வர். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளை வஞ்சித்து விடாதீர்கள்

2024 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி - வேளாண் செய் விவசாயிகள் தங்கள் வயல் நிலத்தில் பச்சைப் பசேலென காட்சி தரும் நெற்பயிர்களைப் பார்த்து ஆனந்தமடைகின்றனர்.

இன்னும் அதை விரித்துக்கூறுவதாயின், நெற் பயிர்கள் கதிர்களைப் பிரசவிக்கப் போகின்றன. இன்னும் ஒரு சில வாரங்கள் மட்டுமே அதற்கான காத்திருப்பு.

கழனிகள் தோறும் நெற்பயிர்கள் அசைந்து ஆடுகின்ற அந்த அற்புதக் காட்சிக்குள் விவசாயிகளின் கற்பனைகளும் அசைந்து ஆடுகின்றன.

ஆம், என் வயல் விளைந்து தரும்போது யாம் மட்டுமல்ல இந்த வையகம் முழுவதும் பசி ஆறும். கூடவே நான் பட்ட கடன் கட்டி முடியும். பெற்ற பிள்ளைகளுக்கு ஒரு தந்தையின் கடமை தடையின்றித் தொடரும்.

இந்த எதிர்பார்ப்புகளோடு வயல் வெளி வரம்புகளில் மெல்ல நடந்து, கருவுற்ற நெற்பயிர்களை அன்போடும் கருணையோடும் பார்க்கின்ற அந்தக் கணம் எல்லாப் பாடுகளும் மறந்து போகும். இதயம் மகிழ்ந்து கொள்ளும்.

என்ன செய்வது விவசாயிகளின் தலை விதியை இயற்கை அடிக்கடி மாற்றி எழுதி விடுகிறது.

ஓ! கொட்டித் தீர்க்கிறது கனமழை. வரம்புகளை வெட்டி விட்டும் பெரு வெள்ளம் ஓட முடியாமல் நெற்பயிர்களை சவட்டி முறித்து அதன் மேல் ஏறி நின்று நெல் விதைத்த விவசாயிகளை செருக்கோடு பார்க்கிறது.

யாருமே எதிர்பார்க்காத மழை 2024ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் கொட்டிச் சரிக்க, பட்ட கடனை எங்ஙனம் கட்டி முடிப்பது என்று தெரியாமல் எங்கள் விவசாயிகள் ஏங்கி விறைத்து நிற்கின்றனர் இங்கே.

ஆகையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நட்டஈட்டை எந்தக் குறையுமின்றிக் கொடுத்து உதவுங்கள். சொந்தப் பகை காட்டி பாதிப்பைப் பதிய மறுக்கின்ற கமக்காரர் அமைப்புகளை ஆற்றுப்படுத்தி, உள்ளதை உள்ளவாறு உரைக்கும்படி கூறி வையுங்கள்.

படிவம் முடிந்து விட்டது என்று கூறி முன்னர் ஒரு தடவை விவசாயிகளுக்கு அநீதி இழைத்ததை இன்னமும் அப்படியே தொடராமல், ஏற்பட்ட பாதிப்புக்கு உரிய இழப்பீடு கிடைக்க உதவுங்கள்.

இவ்விடயத்தில் கமத்தொழில் திணைக்களங்கள், பெரும்பாக உத்தியோகத்தர்கள், கமக்காரர் அமைப்புகள் எனக் கூட்டாக இணைந்து, ஏற்பட்ட பாதிப்புகளை உரியவாறு பதிந்து; கிடைக்க வேண்டிய நட்டஈட்டைப் பெற்றுக் கொடுங்கள்.

விவசாயிகள் வாழ்ந்தால் தான் நாங்கள் வாழ முடியும். இதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.

# தமிழரசுக் கட்சியிலிருந்து சிலர் நீக்கப்படவுள்ளனர்

## முன்னாள் எம்.பி சுமந்திரன் தெரிவிப்பு

(வவுனியா)

இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து சிலர் நீக்கப்படுவதுடன், சிலர் இடைநிறுத்தப்படுவர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கட்சிக்கு எதிராகப் போட்டியிட்டவர்களை உடனடியாகக் கட்சியிலிருந்து நீக்குவதற்குப் பொதுச் செயலாளருக்கு அதிகாரம் இருக்கிறது என மத்திய குழு ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அதனைப் பொதுச் செயலாளர் எதிர்வரும் நாட்களில் செய்வார்.

வேறு சிலர் கட்சிக்கும் கட்சியினுடைய வேட்பாளருக்கு எதிராகவும் செயற்பட்டமை தொடர்பிலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். அந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் வரைக்கும் அவர்கள் கட்சியின் செயற்பாடுகளிலிருந்து இடை நிறுத்தப்படுவார்கள்.

கடந்த காலத்தில் அரசியல் உருவாக்கம் சம்பந்தமான விடயங்களில் தமிழரசுக் கட்சி தீர்க்கமான நிலைப்பாடுகளை எடுத்திருக்கின்றது. சில வரைவுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. சில வரைவுகளோடு நாங்கள் இணங்கி இருக்கின்றோம். ஆகவே அது எங்களுடைய நிலைப்பாடு.

அதனைத் தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷவினுடைய காலத்தில் அவர் நியமித்த குழுவுக்கு முன்பாகவும் நாங்கள் சென்று எங்களுடைய நிலைப்பாட்டை எழுத்து மூலமாக கொடுத்திருக்கிறோம்.

ஆகவே அது எங்கள் கட்சியினுடைய நிலைப்பாடு. அவ்வாறான நிலைப்பாட்டோடு ஒத்து வருகின்றவர்கள் இருந்தால் எந்த ஆட்சேபனையும் கிடையாது.

ஆனால் வேறு சிலர் எங்களுடைய கட்சிக்குப் போட்டியாக வேண்டுமென்றே வெவ்வேறு வரைவுகளைச் செய்து சில குழப்பங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

அவ்வாறான குழப்பங்களை அந்தக் காலப்பகுதியில் செய்தவர்களோடு, அவர்களுடைய வரைவுக்கு இணங்கிச் செல்ல வேண்டிய அவசியம் நமக்குக் கிடையாது.

தமிழரசுக் கட்சி தமிழர்களுடைய பிரதான கட்சி. வடக்குக் கிழக்கில் சகல மாவட்டங்களிலிருந்தும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்திருக்கின்ற ஒரே ஒரு கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சி.

ஆகவே மக்கள் கொடுத்த அந்த ஆணையை மீறி செயற்படமாட்டோம். மற்றவர்கள் எங்களோடு எங்களுடைய நிலைப்பாட்டோடு இணைந்து செயற்படுவதற்கு வருவார்களாக இருந்தால் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை எனத் தெரிவித்தார். (ம-7.250)

# புத்தளத்தில் விபத்து இருவர் உயிரிழப்பு

புத்தளம் கற்பிட்டி - பாலாவி பிரதான வீதியின் தேத்தாப்பொல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக நுரைச்சோலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தழுவ - கஜுவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த 36 மற்றும் 28 வயதுடைய இருவரும் மரணமாகியுள்ளதுடன், 22 வயதுடைய ஒருவர் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பாலாவியில் இருந்து கற்பிட்டிப் பகுதியை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளிலும் கற்பிட்டியில் இருந்து பாலாவி நோக்கிப் பயணித்த லொறியும் மோதியதில் இந்த விபத்துச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ம-7)

# மார்கழிப் பெருவிழா

## யாழில் முதன் முறையாக யானை மீது திருமுறை வீதியுலா

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபை முன்னெடுக்கும் "மார்கழிப் பெருவிழா", இம்முறை மார்கழித் திங்கள் 10ம் நாள் (25-12-2024) புதன்கிழமையன்று யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 8 மணியளவில் வண்.பண்ணை வைத்தீசுவரர் திருக்கோயில் வழிபாட்டுடனும் மற்றும் திருமுறை, நால்வர் யானையில் திருவீதியுலாவிற்கு எழுந்தருளலுடனும் அரங்கங்கள் ஆரம்பமாகவுள்ளது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் மார்கழி விழாக்கள் நடைபெறுகின்ற போதும், ஈழத் திருநாட்டில் கடந்த 2021ம் ஆண்டில் இருந்து தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் [illegible] கருத்தாக்கத்தில் சிவத்தின் மற்றும் சைவத்தின் பெருமைகளை திருமுறைகளை வழி எடுத்தியம்பும் பிரமாண்ட விழாவாக கொண்டாடிவருகிறது.

இம்முறை நான்காவது முறையாக நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பிற மாவட்டங்களில் இருந்தும் பலர் பங்குபற்றவுள்ளனர்.

மேலும் இம்முறை அறநெறி ஆசிரியர்களின் அளப்பெரும் சேவையை போற்றும் விதமாக, அதியுயர் விருதான "மெய்கண்டார் விருது" தெரிவு செய்யப்பட்ட அறநெறி ஆசிரியர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

இம்முறையும் முன்னர் போல் தமிழகத்தில் இருந்து அறிஞர்கள், அருளாளர்கள், இசை வல்லுநர்கள் வருகை தரவுள்ளனர்.

அத்துடன் இலங்கையில் இருக்கும் உள்ளக கலைஞர்கள், பேச்சாளர்கள் [illegible] சிறப்பிக்க இருக்கின்றனர். (ம-7)

### அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம்

# மன்னார் மாவட்டத்தின் புதிய ஆயராக நியமனம்

(மன்னார்)

மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மறைமாவட்ட ஆயராக மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் திருத்தந்தையால் நியமிக்கப்பட்டு, அச் செய்தியை திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி ஊடாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று சனிக்கிழமை (14) மாலை 4.15 மணியளவில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் திருத்தந்தையால் நியமிக்கப்பட்ட அறிவிப்பை அறிவித்தார். (ம-7.299)

# மாத்தறையில் மின்சாரம் தாக்கி பலியானவர் சடலத்தை

## மறைத்து வைத்திருந்த இருவர் கைது

மாத்தறை - வல்யிங்குருகெட்டிய பகுதியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த நபரின் சடலத்தை மறைத்து வைத்திருந்த இரண்டு பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விலங்குகளை வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தப்படும் அனுமதியற்ற மின்சார வேலியில் சிக்குண்டு குறித்த நபர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, மின்சார வேலியைப் பொருத்திய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், தாம் பொருத்திய மின்சார வேலியில் தாக்கப்பட்டுக் குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அந்தச் சடலத்தை யாரும் கண்டறியாத வகையில் மறைத்து வைக்க ஏற்பாடு செய்ததாகவும் சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் 58 வயதுடைய ஒருவரே உயிரிழந்தவராவார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தாதோட்டம் வீதியை புனரமைத்து தாருங்கள்

## மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட புலோலி வடகிழக்கு சந்தா தோட்டம் வீதியை புனரமைக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது பெய்துவரும் மழை வெள்ளம் வீதியில் தேங்கி நிற்பதனால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

இவ் வீதியில் தான் புலோலி வடகிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கிராம அலுவலர் அலுவலகம், அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம், சமுர்த்தி அலுவலர் காரியாலயம் என்பன அமைந்துள்ளன.

50 வருடங்களுக்கும் மேலாக செப்பனிடப்படாத இவ் வீதியை புனரமைத்துத் தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-8)

# வடக்கு மாகாணத்திற்கான நீண்டகால அபிவிருத்தித் திட்டம்

## விரைந்து செயற்படுமாறு ஆளுநர் ஆலோசனை



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்துக்கான நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பது தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கூட்டத்தில் உரையாற்றிய ஆளுநர் தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் வடக்கு மாகாணத்தில் மிகப்பெரிய அபிவிருத்தியை முன்னெடுக்க வாய்ப்புள்ளது.

எனவே மாகாணத்தில் மிகப்பெரிய நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்க வேண்டிய திட்டங்களை விரைந்து திணைக்களங்கள் தயாரிக்க வேண்டும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி ஆகியனவற்றின் ஆலோசகராக இருந்த திருமதி ஜீவா பெருமாள் பிள்ளை அவ்வாறான திட்டங்களை தயாரிப்பதற்கு உதவுவதற்காக வந்திருப்பதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலர்கள், திணைக்களங்களின் பணிப்பாளர்கள், திணைக்களத் தலைவர்கள் வடக்கு மாகாண அபிவிருத்திக்கான திட்ட முன்மொழிவுகளை முன்வைத்தனர்.

ஒவ்வொரு திணைக்களங்களினதும் முன்மொழிவுகள் திட்ட வரைவுகளாக தயாரிக்கப்பட்டு வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் ஊடாக அவை தொகுக்கப்பட்டு ஆளுநரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகளை விரைந்து முடிக்குமாறு ஆளுநர், அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். (நி-8)

# ஆங்கில, சிங்கள மொழிப்பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட காரியாலயத்தின் கீழ் இயங்கும் பயிற்சி நிலையத்தில் இளைஞர் யுவதிகளுக்கான ஆங்கில மற்றும் சிங்கள மொழிப்பயிற்சி நெறியானது எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே ஆர்வம் உள்ள இளைஞர் யுவதிகள் தங்கள் விண்ணப்பங்களை/ சுய விபரத்தினை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி பயிற்சி நிலையம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், 155 ஆம் கட்டை A9 வீதி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (நி-8)

# மேயர் வேட்பாளராக ஹிருணிகாவை களமிறக்க திட்டம்

(கொழும்பு)



ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்குத் தேசியப் பட்டியல் வாய்ப்பு வழங்கப்படாமை தொடர்பில் கடும் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு மேயர் வேட்பாளராக ஹிருணிகாவை களமிறக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

கடும் இழுபறிக்கு மத்தியில் தேசியப்பட்டியல் பிரச்சினைக்கு ஐக்கிய மக்கள் சக்தி நேற்று தீர்வு கண்டுள்ளது. ஐக்கிய மக்கள் கூட்டணி சிதையாத வகையில் பங்காளிக் கட்சிகளுக்கும் தேசியப் பட்டியல் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைக்கப் பெற்ற ஐந்து தேசியப் பட்டியல் ஆசனங்களில் பங்காளிக் கட்சிகளுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய மூன்று ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் நிஷாம் காரியப்பர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் ஆ.மொஹமட் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் சுஜீவ சேனசிங்க ஆகியோரின் பெயர்கள், தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தேசியப் பட்டியல் உறுப்பினராக இதற்கு முன்னர் பெயரிடப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
8 இல் செவ்
கி.பா : 57 1/4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc In Agri விவசாய போதனாசிரியர்.
எதிர்பார்ப்பு : அரச உத்தியோகம்
தொ.இ: B/15004

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கேட்டை
7 இல் செவ்
கி.பா : 16
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L, Diploma தனியார் தொழில்நுட்பவியலாளர்.
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15005

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 23 1/2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L, Company Work
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15006

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
8 இல் செவ்
கி.பா: 46
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc, ஆசிரியர்.
எதிர்பார்ப்பு: BSc, அரச உத்தியோகம்,
தொ.இ: G/15001

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Political Science, Senior Officer (Australia)
எதிர்பார்ப்பு: Degree and Employee
தொ.இ: G/15002

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 37
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Degree , Teacher, (Australia)
எதிர்பார்ப்பு : Degree and Employee
தொ.இ: G/15003

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

கலந்துரையாடப்படவுள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், இந்தியத் தலைநகரில் இடம்பெறவுள்ள வர்த்தக நிகழ்வொன்றிலும் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பலரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (ம-7)

## மயங்கி வீழ்ந்த...

நாவற்குழி கிழக்கு, கைதடியைச் சேர்ந்த கந்தையா ஆனந்தராசா என்ற 65 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பான மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி வி.அன்ரலா மேற்கொண்டார். (ம-7)

## சபாநாயகரின்...

மாச் செய்தமை பாராட்டத்தக்கது எனப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்கள் சமூகமயப்படுத்தப்பட்ட கல்வித் தகுதியை நிரூபிக்கத் தவறினால் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என நாமல் எம்.பி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் பாராளுமன்றத்தை நடத்தும் தத்துவத்திற்கு எதிராக, அதே கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கல்வித் தகைமை தொடர்பில் மக்களைத் தவறாக வழிநடத்துவது மிகவும் வருத்தமளிப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## உலக செஸ்...

நடப்புச் சம்பியனான சீனாவின் டிங் லிரென்குடன் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் அவர் குறித்த வெற்றியை தன்வசப்படுத்தியுள்ளார்.

13 சுற்றுகள் முடிவில் இருவரும் தலா இரண்டு சுற்றுகளில் வெற்றி பெற்று இருந்த நிலையில், இதனால் இருவரும் தலா 6½ புள்ளிகளுடன் சம நிலையில் இருந்தார்கள்.

இந்நிலையில், 14ஆவது மற்றும் கடைசி சுற்று சிங்கப்பூரில் நடைபெற்றது.

இதில் குகேஷ், கருப்பு நிற காய்களுடன் விளையாடி சீன வீரரை வீழ்த்தி உலக செஸ் சம்பியன் பட்டத்தை தன தாக்கினார்.

இதில் 58ஆவது காய் நகர்த்தலுக்குப் பிறகு டிங் லிரென் தனது தோல்வியை ஒப்புக்கொண்டார்.

இதனால் 18 வயதில் உலக செஸ் சம்பியன்ஷிப் பட்டத்தை வென்று குகேஷ் சாதனை படைத்துள்ளார். (ம-7)

## அன்ரன்...

மாலை இடம்பெற்றது.

சமூக செயற்பாட்டாளர் ஞா.யூட்சன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் முன்னாள் போராளி போசன் மற்றும் முன்னாள் போராளிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் கிளிநொச்சியிலும் இலங்கைத் தமிழ் அரசியல் கட்சியின் அலுவலகத்திலும் அன்ரன் பாலசிங்கத்தின் நினைவேந்தல் இடம்பெற்றது. (ம-7,299)

## எதிர்வரும்...

மற்றும் 18ஆம் திகதிகளில் பாராளுமன்ற அமர்வை நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சபாநாயகர் பதவியிலிருந்து தாம் விலகுவதாக அசோக ரன்வெல நேற்று முன்தினம் அறிவித்த நிலையில்புதிய சபாநாயகர் தெரிவு இடம்பெறவுள்ளது.(ம-7)

## தையிட்டி...

பட்ட மக்களுக்கு இடையே இந்த அமைதியின்மை ஏற்பட்டது.

சட்டவிரோத முறையில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், மக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

(மற்றொரு செய்தி உள்ளே)

## ஐ.நா...

அமரசூரியவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையில் அகதிகள் தொடர்பான சவால்களை எதிர்கொள்வதில் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் அர்ப்பணிப்பு மற்றும் கணிசமான பங்களிப்புகளுக்கு பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஐ.நா அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் இலங்கை அலுவலகத்தின் தலைவர் சஞ்சிதா சத்தியமூர்த்தி இணைந்து கொண்டார்.

அத்துடன் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் பி.டபிள்யூ.ஜி.சி. சாகரிகா போகஹவத்த மற்றும் வெளிவிவகார அமைச்சின் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமைகள் பிரிவின் பணிப்பாளர் நாயகம் தயானி மெண்டிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.(ம-7)

## குடும்...

(வயது-43) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவர் ஆவார்.

வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த வேளை திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

சடலம் அச்சுவேலி வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7)

## நீதிமன்றுக்கு அருகில் துப்பாக்கிச் சூடு பெண் காயம்

(கொழும்பு)

மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றுக்கு அருகில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார். பொலிஸ் ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் நடத்தப்பட்ட குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த பெண் சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு தொடர்பான மேலதிக விசாரணைகளை மாளிகாகந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


**மஹஜன சம்பத** — திகதி 2024.12.14 — சீட்டிழுப்பு இலக்கம் 5685 — E 2 2 2 4 4 5
**அத சம்பத** — E 2 4 4 5 — சீட்டிழுப்பு இலக்கம் 260

**தன நிதானய** — திகதி 2024.12.14 — சீட்டிழுப்பு இலக்கம் 1715 — K 50 69 74 82 K — Double Chance 71017

**மெகா பவர்** — திகதி 14/12/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 2033 — F 20 16 22 33 35 — Double Chance 161810

**லக்கி 7 VIP** — திகதி 2024.12.14 — சீட்டிழுப்பு இலக்கம் 511 — T 4 9 7 6 2 8 T

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3927 — சீட்டிழுப்பு திகதி 14.12.2024 — B 10 16 17 35 — B 020425

**HANDAHANA** உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.12.14 — சீட்டிழுப்பு இலக்கம் 994 — விருச்சிகம் 12 18 51 57 விருச்சிகம் — 157421 — 33

உத்தியோகபூர்வ முடிவுகள் — **சுப்பர் வின் சம்பத** — 14.12.2024 — வெற்றி வாரம் 393 — A 3 9 1 8 7 8 — 89907 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,226,398.80

**SUPER BALL** — சீட்டிழுப்பு வாரம் 2659 — சீட்டிழுப்பு திகதி 2024.12.14 — தினம் சனிக்கிழமை — 02 24 44 59 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 73,846,016.00

**சனிதா** — திகதி 14.12.2024 — வெற்றி வாரம் 4820 — 13 19 20 51 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,346,630.80 — 12578

**சசிரி** — வெற்றி வாரம் 578 — சீட்டிழுப்பு திகதி 14.12.2024 — சனிக்கிழமை — 07 13 15 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

**ராசி** — சீட்டிழுப்பு வாரம் 4371 — சீட்டிழுப்பு திகதி 14.12.2024 — தினம் சனிக்கிழமை — 25 33 41 55 மேடம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,697,019.20 — 112029

**கப்ருக** — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — X 31 15 27 29 40 — 1835 — 14.12.2024 சனிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.558,205,128.60

**அட கோடிபதி** — சனிக்கிழமை — வெற்றி வாரம்: 2485 — சீட்டிழுப்பு திகதி: 2024.12.14 — 03 13 28 40 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,171,579.20 — 467339

வலம்புரி 076 636 3378, 076 097 3127 விளம்பரத் தொடர்புகளுக்கு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேவை

யாழில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு உயர்தரம் படித்த கணனி அறிவு உள்ளோர் தேவை. இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். அத்துடன் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் தேவை. (C-1796)

**074 056 7791**

## காணி தேவை

யாழ். மாவட்டத்தில் யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட கோப்பாய் பிரதேசத்திற்கு உட்பட்ட வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் 10 பரப்பிற்கு மேற்பட்ட காணி தேவை. காணி உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும். தரகு

தொடர்பு : **077 468 3354** (2757)

## பகுதி நேர வேலைவாய்ப்பு

- விற்பனை முகவர்கள்
- விளம்பர முகாமையாளர்கள்
- அறிவிப்பாளர்கள்
- சந்தைப்படுத்தல் உதவியாளர்கள்

தேவை. (2764)

**077 254 0528**
**077 651 0375**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடியில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்

1 பரப்பின் விலை :

24 இலட்சம் ரூபாய் [ 24 00 000/= ]

- 20 அடிப் பாதை
- 2 பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை.
- UDA சான்றிதழ் பிரதேச சபை சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்படும். (2757)

**076 298 1105, 076 017 1105**

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்துக்கு சொந்தமான கட்டிடம் வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு முன்பாக அமைந்துள்ள கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் 3000 மூவாயிரம் சதுர அடி இடப்பரப்புள்ள கட்டிடம் குறுகிய/நீண்ட கால வாடகைக்கு விடப்படவுள்ளது. தேவையானோர் தொடர்பு கொள்ளவும்.

முகவரி
யாழ். மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (C-1798)

செயலாளர்
கா.பாஸ்கரன்
தொலைபேசி இல:
077 598 8298
021 222 3814
077 665 3323

## வேலையாள் தேவை

யாழ். அல்லைப்பிட்டியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சுற்றுலாப் பயணிகள் விடுதிக்கு தோட்ட பராமரிப்பு வேலைக்கு ஆள் தேவை.

தொடர்புகளுக்கு : (2726)

**074 056 7791**

## வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42 வது வீதியில் 2 அறைகள் இணைந்த குளியல் அறையுடன் கூடிய தொடர் மாடி வீடு நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு. (2751)

**075 278 6033**

## வேலைக்கு ஆள் தேவை

உரும்பிராயில் அமைந்துள்ள Store ஒன்றிற்கு களஞ்சிய பொறுப்பாளர் தேவை. வயது 50 ற்கு மேல் (ஓய்வூதியர்கள் விரும்பத்தக்கது.) கணக்கு பதிவேடுகள் எழுதக் கூடியவர். (634)

தொடர்புகளுக்கு
**077 773 0900**
இடம் : உரும்பிராய்

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு (C-1803)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு : (620)

**075 033 6759**

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378 | 076 097 3127**

## சாரதி தேவை

யாழ்.சாவகச்சேரிப் பகுதியைத் தளமாகக் கொண்டு இயங்கும் கட்டட நிறுவனத்துக்கு பார ஊர்தி வாகன சாரதி அனுமதிப் பத்திரம் உடைய சாரதி தேவை. (சாவகச்சேரிப் பகுதியை அண்மித்தவரும், பொருட்கள் ஏற்றி இறக்குபவரும் விரும்பத்தக்கது) (2741)

**077 9587 176**

## வீடு வாடகைக்கு உண்டு

திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில் மிகவும் அமைதியான சூழலில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வீடு வாடகைக்கு உண்டு (629)

தொடர்புகளுக்கு :
**077 7880 330**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 239/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 01 5Kg Prima மா பை | - 920/= | ~~1150/=~~ |
| 1Kg சிவப்பு பருப்பு | - 279/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 388/= | |
| 1Kg பயறு | - 570/= | |
| 1Kg சிவப்பு கௌபி | - 650/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு No 1 | - 780/= | |
| 1Kg மல்லி | - 380/= | |
| 01 விஜிதா அரிசி 10Kg | - 2700/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 280/= | |
| 500g சமபோஷா | - 379/= | ~~420/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 175/= | ~~240/=~~ |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 980/= | ~~1050/=~~ |

1Kg சவர்க்காரத் தூள் 310/= ~~360/=~~

400g Anchor 987/= ~~1050/=~~ Max 01

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (634)

Happy Supermarket
0777 8080 30

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- இரண்டு ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- இரண்டு பரப்புள்ள துண்டொன்றுக்குள் 6 - 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

ஒரு பரப்பின் விலை

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- கடற்கரையை (Beach) முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- 20 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம்

காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம் (2759)

**077 814 7389, 077 986 5457**

## சிறிராம் ஜுவல்லர்ஸ்



புத்தாண்டை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான விசேட சலுகை

22 கரட் தங்க ஆபரணங்களுக்கான செய்கூலி சேதாரத்தில் 20% - 50% வரையிலான விலைக்கழிவு வழங்கப்படும்.

வாங்கும் அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ் வழங்கப்படும். (C-1772)

இல.158, 193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**077 165 1729, 077 773 0567, 021 222 8334**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.